26.12.2022
திங்கட் கிழமை

1. பகவத் ராமானுஜரின் சரணாகதி கத்யம் - விளக்கம் - ***சூர்ணிகை எண் - 18***

***ஏவம் பூதோஸி***

2. ***சூர்ணிகை பத உரை*** :

ப்ரபத்தி அனுஷ்டானத்தினால் பகவத் அனுக்ரஹம் பெற்ற உடன் 'ஸ்வரூப ப்ராப்தமான பகவத் கைங்கர்யங்களுக்கு தடையான பாபங்கள் நீங்க, அந்த சரணாகதன் ஸ்வரூப தெளிவை அடைந்து அதன் காரணமான இங்குள்ள காலம் உத்தரக்ருத்யத்தில் ஈடுபட்டு விடுகிறான்' என்றபடி

3. ***சூர்ணிகை விளக்கம்*** :

# சரணாகதனுக்கு உத்தரக்ருத்யமான தேஹ அவஸானம் உள்ள நிலையை, அவதார காலத்தில், பகவத் அபிநயமாகவே இருந்தாலும், ஶ்ரீராமானை கைபிட்டித்தி பின்னர், ஸீதா பிராட்டியை உதாஹரணமாக்கிக் கண்டு கொள்ளலாம் ; ஶ்ரீராம தூதனான சிறிய திருவடி, ஸீதா பிராட்டியிடமிருந்து வந்து ஶ்ரீராமனைக் கண்டு உரைத்ததாவது :

***நைஷா பஷ்யதி ராக்ஷஸ்யோ நேமாந் புஷ்ப பலத்ருமான். ஏகஸ்த ஹ்ருதயா நூநம் ராமமேவ அனுபஷ்யதி***

அதாவது, அசோகவனத்தில் இருந்த ஸீதை அங்குள்ள ராக்ஷஸிகளைக் கண்டு கலங்கவில்லை, பூக்கள் கனிகள் நிறைந்த மரங்களைக் கண்டு சந்தோஷப்படவில்லை, ஶ்ரீ ராமன் வரவையே எதிர் நோக்கி இருக்கிறாள் - இவ்வாறு தூது சென்ற ஹனுமான் ஶ்ரீராமனுக்கு எடுத்துரைக்கிறான். அவ்வாறு, சரணாகதனுக்கு, இப்ராக்ருத லோகத்தில் பல விதமான அல்ப ஸுகங்களோடும் மற்றும் இன்னல்களோடும் கூடி இருந்து போகும் போது, ***பகவத், பாகவத ஆசார்ய கைங்கர்யம் நீங்கலாக எந்த ஒரு சந்தோஷ காரணங்களிலும்*** கண்ணோட்டம் உண்டாகக் கூடாது, என்பதில் தாத்பர்யம் ; அதுவும் அவனது இன்னருளே.

# பூர்வ ஜன்ம ஸுஹ்ருதத்தினால், முமுக்ஷுவாகிறான் சம்சாரி ஜீவன் ; ஐந்தாவது வேதமாகக் கொண்டாட்ப் படும் மஹாபாரதத்தில், வேதவ்யாஸ மஹரிஷி அருளும் போது,

***ஜாயமானம் ஹி புருஷம் யம் பஷ்யேன் மதுஸூதந: ஸாத்விக்ஸ்து விக்ஞேய: ஸவை மோக்ஷார்த்த சிந்தக: பஷ்யத்யேநம் ஜாயமானம் ப்ருஹ்மா ருத்ரௌ அதவா புந: ரஜஸா தமஸா சாஸ்ய மானஸம் ஸம்பிப்லுதம்***

என்கிறார் ; அதாவது,

எந்த குழந்தை பிறக்கும் போது ஸர்வேஸ்வரனான மதுஸூதனனால் கடாக்ஷிக்கப் படுகிறானோ, அவன் ஸாத்வீக குணத்தோடு இருந்து கொண்டு மோக்ஷத்திற்கான எண்ணம் கொண்டவனாக இருப்பான். ஆனால், எந்த குழந்தை பிறக்கும் போது ப்ருஹ்மா ருத்ரன் போன்றவர்களால் கடாக்ஷிக்கப் படுகிறானோ, அவன் ரஜோ தமோ குணங்களோடு இருந்து கொண்டு மோக்ஷத்திற்கான எண்ணம் இல்லாமல், அழியக்கூடிய உலக வாழ்க்கையில் அதிக ஈடுபாடு கொண்டவனாக இருப்பான், என்கிறார்.

# கண்ணன் கீதையில் (9-30)

***அபிசேத் ஸுதுராசாரோ பஜதே மாம் அநந்ய பாக். ஸாதுரேவ ஸ மந்தவ்ய:ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ:***

என பாகவதர்களை கொண்டாடுகிறான். அதாவது, மிகவும் ஆசார குறைவு உள்ளவனானாலும், வேறு பலனில் நாட்டமின்றி என் பக்தனாக ஆகி, என்னை வழிபடுவானாகில், அவன் மதிக்கத் தக்க

வைஷ்ணவனே எனக் கருதுக ; ஏனெனில் அவன் அனைத்தும் நானே என்ற உறுதி கொண்டவன். பாகவதர்களின் ஏற்றம் இதனாலும் புலனாகிறது. அந்த பாகவதனிடம் உள்ள குறைகளை ஸர்வேஸ்வரன் காலப் போக்கில், அவன் அனுக்ரஹத்தால் சரி செய்து விடுகிறான், என்பதில் தாத்பர்யம், ஏனெனில், ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிப்பவர்களில் ஞானி ஏற்றமுடையவன் என்பதை கண்ணன் பகவத் கீதையில் (7-17) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

***தேஷாம் ஞானி நித்ய யுக்த ஏக பக்தி விஷிர்ஷ்யதே. ப்ரியோஹி க்ஞாநிநோர்த்யர்தம் அஹம் ஸ ச மம ப்ரிய:***

அதாவது, அவர்களுக்குள் ஞானி என்பவன் எனக்கு பிரியமானவன். ஏனெனில் அவன் என்னுடனேயே இருக்க ப்ரிய படுபவன். மற்றவர்கள் பலன் கிடைத்ததும் விலகுவார்கள் ; ஜீவாத்மாக்களின் இயபான நிலை ஸர்வேஸ்வரனான கண்ணனுக்கே தாஸ பூதர்கள். அதனால், ஸர்வேஸ்வரனான கண்ணனை மட்டும் பூஜிப்பவர்கள் அனைவரையுமே சிறந்தவர்களாக அவனால் கருதப் படுகிறார்கள். அதிலும், உலக பலனை எதிர்பார்த்து ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிப்பவர்களை விட, ஸர்வேஸ்வரனான கண்ணனையே (மோக்ஷ பலனை) விரும்புவர்களை ஞானி என்று போற்ற படுகிறார்கள்.
அந்த ஞானியை தனக்கு மிகவும் ப்ரியமானவன் என்று கண்ணன் வர்ணிக்கிறான்.

# ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாயத்தில், ***ஸ்ரீவைஷ்ணவர்கள்*** ***பாகவதர்கள்*** ***ப்ரபன்னர்கள்*** ***பரமேகாந்திகள்*** என்பது பர்யாய பதங்கள் ; அதாவது, ஒரே பொருளை உணர்த்தும் பல பதங்கள் - பகவத் அடியார்கள், என்பதைச் சொல்லுவதாகிறது ; இந்த பகவத் அடியார்களின் லக்ஷணத்தை அறிய, ஸ்வாமி தேசிகனின் ***ப்ரபாவ ரக்ஷ அதிகாரத்தில்*** உள்ள வரிகளை நினைவில் கொள்வது நன்று :

***நம் தர்சனத்திலே நிலை உடையவராய், முமுக்ஷுக்களாய், கர்ம-ஞான-பக்தி-ப்ரபத்திகளில் ஏதேனும் ஒரு சாஸ்த்திர மர்யாதையாலே பகவத் ப்ரவணரானார்க்கு....***

இதை, இப்பரகரணத்தில், தெளிய வேண்டும்:

***நம் தர்சனத்திலே நிலை உடையவராய்*** எனபதால் முக்கியமாக பெரிய பிராட்டியோடு சேர்ந்த நாராயணன் பரம் பொருள் என்றும், மற்ற தேவதாந்தரங்கள் ஆராத்யர்கள் அல்ல என்றும், சரணாகதி அனுஷ்டானமே மோக்ஷ உபாயம் என்கிற விஷயத்திலும் *கலக்கமற்ற மனோ-வாக்கு-செயல்களை உடையவர்களாக இருப்பவர்கள்* , என்பதாகிறது பாகவத லக்ஷணம்.

***முமுக்ஷுக்களாய்*** - ப்ரயோஜநான்தர அபேக்ஷை அற்று மோக்ஷ ருசி மட்டுமே உள்ளவராய்

***கர்ம -ஞான-பக்தி-ப்ரபத்திகளில் ஏதேனும் ஒரு சாஸ்த்திர மர்யாதையாலே பகவத் ப்ரவணரானார்க்கு*** என்பதினால் மோக்ஷ உபாயமான கர்ம யோகம் தொடக்கமான பக்தி யோகம் அல்லது சரணாகதி அனுஷ்டானத்தில் அந்வயம் கொண்டவர்களே பாகவத லக்ஷணம் பொருந்தியவர் என்பதாகிறது.

4. ஸ்ரீராமானுஜ க்ரந்தங்களோடு அத்யந்த அர்த்த விரோதம் கொண்டவர்கள் பூர்வபக்ஷிகள், என்பது ப்ரமாண பலத்தால் ஸித்தம் !

# ***ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த பக்ஷம்*** -

உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, ***ப்ருஹ்ம ஸூத்ரம்*** (4ம் அத்யாயம் 1ம் பாதம் 7வது அதிகரணம் 13ம் ஸூத்ரம்)

***ததகிம உத்தர பூர்வ அகயோ: அஸ்லேஷ வினாஷௌ தத் வ்யபதேஷாத்***

என்கிறது. அதனை பகவத் ராமானுஜர், தனது க்ரந்தமான ஸ்ரீபாஷ்யத்தில் விளக்கியுள்ளார். அதாவது, இங்கு மோக்ஷத்தை விரும்பி பக்தி யோகமோ அல்லது சரணாகதி அனுஷ்டானமோ செய்பவர்களின் முன்பு

செய்த பாபங்களும் பின்பு ஏற்படும் பாபங்களும் நீங்குவதை பிரித்து கூறப் படுகின்றன. அதில், மோக்ஷ உபாயத்தை அனுஷ்டித்த பிறகு தெரிந்தே செய்யும் பாபங்களை விநாசத்திற்கு விஷயமாக்க, இரு வழிகள் சாஸ்த்ரங்களில் கூறப் படுகின்றன:

செய்த பாபத்திற்காக மனதினால் வருந்தி மற்றுமொரு ***ப்ராயச்சித்தமான*** சரணாகதியை அவனிடத்தில் அனுஷ்டிப்பதனால், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், அந்த பாபங்களைக் காரணமாகக் கொண்டு துன்பத்தைக் கொடுக்காமல், மன்னித்து விடுகிறான்.

***அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயச்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்***

என்கிறது சாஸ்த்ரம். அதாவது, மனதால் பாபம் என அறிந்து, ஒரு பாபச் செயலை செய்ய நேர்ந்தால், ஒரு சரணாகதன் அதற்கான ப்ராயசிதத்தை (பரிஹாரத்தை) உடனடியாக செய்ய வேண்டும். அப்படி பரிஹாரமாக செய்ய வேண்டிய செயல் என்ன என்றால், தவற்றை உணர்ந்து, மீண்டும் அந்த தவற்றை செய்யாதிருக்க உறுதி கொண்டு, எம்பெருமானிடம் மன்னிப்பு கோருவதாகிய 'ப்ராயச்சித்த சரணாகதி' ஆகும். செய்த பாபத்திற்காக மனதினால் வருத்தம் கொள்ளாமலும், அதற்காக ***ப்ராயச்சித்தமான*** சரணாகதியை அனுஷ்டிக்காமலும் இருந்தால், இங்குற்ற காலம் அதற்கான தண்டனைகளைக் கொடுத்து இந்த பாபத்திலிருந்து விடுவிக்கிறான்; முடிவில் மோக்ஷத்தையும் அளிக்கிறான்.

***இஹைவ கேசித் உபக்ளேசா பவந்தி; கஞ்சா பவந்தி; காணா பவந்தி; அவிதேய புத்ரா பவந்தி; அவிதேய பார்யா பவந்தி*** என்கிற கணக்கிலே

அதாவது கண், கை, கால் செயலற்று இருப்பதாயும், மனைவி மக்கள் சொற் பேச்சு கேட்காதவர்களாயும் இருந்து தண்டனை அளித்து இந்த பாபத்திலிருந்து விடுவிக்கிறான், என்பதாகிறது. ஆக, சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு ஏற்படும் பாபங்களை போக்குவதற்கான விளக்கங்கள் இந்த ஸூத்ரத்தில் உள்ள படியால், சரணாகதன் விஷயத்தில் பகவத் கருணையானது, புத்தி பூர்வக அபசாரத்துக்கு, ஒரு ப்ராயஸ்சித்த ப்ரபத்தியில் மூட்டியாவது அல்லது சிக்ஷாவதியாகவாவது நிவர்த்தி செய்து, மோக்ஷ பலன் அளிக்க வல்லது.

# ***ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்*** -

உபநிஷத் சாரமான ப்ருஹ்ம ஸூத்ரத்துக்கு வ்யாக்யானமான பகவத் ராமானுஜரின் ***ஸ்ரீ பாஷ்ய, கீதா பாஷ்ய கத்யாதிகளில்***, சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை மோக்ஷ காரணமாக விதித்து வெளியிட்ட போதும், அந்த ஆசார்யோத்தமரின் க்ரந்த விரோதமாக, ஸித்தோபாய ப்ரதிபத்தி மட்டுமே மோக்ஷ காரணம் என்று நிர்தேசிக்கிறார்கள் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், என்பதனை வசனபூஷண க்ரந்தங்களைக் கொண்டு தெளியலாம் :

***அல்லாத போது பந்தத்துக்கும் பூர்த்திக்கும் கொத்தையாம்*** (எண் - 61) - அதாவது மேலே கூறப்பெற்ற ஸித்தோபாய ப்ரதிபத்தியைத் தவிர்த்து இவனிடம் ஸாத்ய உபாயம் இருத்தல் வேண்டும் என்கிற பக்ஷத்தால் விளைவது தீமையே.

வேத மார்க்கமான பகவத் ராமானுஜரால் ஸ்ரீபாஷ்ய கத்யாதிகளில் சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை விளக்கி இருக்க, ஸாத்யோபாயத்தை நிஷேதித்து விளக்குவது, பூர்வபக்ஷிகளின் ஸம்ப்ரதாய விரோத நோக்கம். அசாஸ்த்ரீயம்.

# ***ஸ்வாமி தேசிகனின் பக்ஷம்*** -

ஸ்வாமி தேசிகன் ஒரு அதிகார ஸங்கரஹ பாசுரம் :

*அறவே பரமென்று அடைக்கலம் வைத்தனர், அன்று நம்மைப் பெறவே கருதிப் பெரும் தகவு உற்ற பிரான் அடிக் கீழ் உறவே இவனுயிர் காக்கின்ற ஓரு இருண்மையை, நீ மறவேல் என நம் மறை முடி சூடிய மன்னவரே*

அதன் பொருளாவது, எம்பெருமான் நமக்கும் அவனுக்கும் உள்ள நித்ய சம்பந்தத்தினால், நம்மைக் காக்க கடமைப் பட்டுள்ளான்; அநாதியாக நம்மைப் பெற கருதி நம்மீது கருணை பொழிகிறான். இத்தகைய ஸர்வேஸ்வரன் திருவடிகளில் காக்கப் பட வேண்டிய வஸ்துவாக, வேதாந்தங்களை நன்கு அறிந்த நம் ஆசார்யர்கள் நம்மை ஸமர்ப்பித்தனர். ஆக, ஆத்ம ரக்ஷா பர ஸமர்ப்பணமே ஸாத்யோபாயமான சரணாகதி அனுஷ்டானமாகும்.

(நாளை சரணாகதி கத்யம் தொடரும்)

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****

27.12.2022
செவ்வாய் கிழமை

1. பகவத் ராமானுஜரின் சரணாகதி கத்யம் - விளக்கம் - ***சூர்ணிகை எண் - 19***

***ஆத்யாத்மிக  ஆதிபௌதிக ஆதிதைவிக து:கவிக்ந கந்த ரஹித: த்வம் த்வயம் அர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதா ஏவம் வக்தா யாவச்சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்க  ஸுகமாஸ்வ***

2. ***சூர்ணிகை பத உரை*** :

# ***ஆத்யாத்மிக  ஆதிபௌதிக ஆதிதைவிக*** - சரீர மன நோய்களுக்கும், பிற ஜந்துக்களால் துன்பத்திற்கும், இயற்கையின் சீற்றத்தால் வரும் துயரத்துக்கும் காரணமான

# ***து:கவிக்ந கந்த ரஹித: த்வம்*** - இடர்களின் சுவடுகள் களையப் பெற்று தேவரீர் வாழ்வீர்

# ***த்வயம் அர்த்தாநுஸந்தாநேந*** -  த்வய மந்திரத்தையும் அதில் உள்ள அங்க அங்கி விளக்கங்களையும்

# ***ஸஹ ஸதா ஏவம் வக்தா*** - உப்போதும் ஆவர்த்தித்துக் கொண்டு

# ***யாவச்சரீரபாதம்*** - பரமபதம் அடையும் வரையில் உத்தரக்ருத்யமாக இங்குள்ள காலம்

# ***அத்ரைவ ஸ்ரீரங்க  ஸுகமாஸ்வ*** - வரையில் பூலோக வைகுண்டாமான ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தில் பகவத் கைங்கர்யங்களில் சுவை கொண்டு வாழ வேண்டும் (இந்த ஸ்ரீரங்க க்ஷேத்ரமானது, ப்ரபன்னர்கள் இங்குள்ள காலம் வசிக்க, அனைத்து பகவத் க்ஷேத்ரங்களுக்கும் உபலக்ஷணம் என நம் பூர்வர்கள் அருளுவர்)

3. ***சூர்ணிகை விளக்கம்*** :

# ஒரு முமுக்ஷுவானவன், ஐந்து அங்கங்களோடு கூடிய சரணாகதி அனுஷ்டானத்தை, ஸாத்வீக த்யாகத்தோடு , ஒரு ஸதாசார்யன் துணையோடு அனுஷ்டித்த பிறகு, இங்குள்ள காலத்தை கழிக்க வேண்டிய ப்ரகாரத்தை ஸ்வாமி தேசிகன், ***உத்தரக்ருத்யாதிகாரத்தில்*** அருளியுள்ளார்:

*ஸந்தோஷார்த்தம் விம்ருசதி முஹு: ஸத்பி: அத்யாத்ம வித்யாம் நித்யம் ப்ரூதே நிசமயதி ஸ்வாது ஸூவ்யாஹ்ருதாநி அங்கீகுர்வந் அநக லலிதாம் வ்ருத்திம் ஆதேஹபாதாம் த்ருஷ்டா த்ருஷ்ட ஸ்வ பர விகமே தத்த த்ருஷ்டி: ப்ரபன்ன:*

அதாவது, ஒரு சரணாகதன் இங்குள்ள காலம் இவ்வாறு இருக்க வேண்டும்:

மோக்ஷத்திற்கான சரணாகதியை அனுஷ்டித்தவன், கண்கூடாக காண்கிற சரீர வாழ்க்கையிலும் கண்ணுக்கு இலக்கு ஆகாத பிறகு வரக்கூடிய மோக்ஷ வாழ்க்கையிலும், தன் பொறுப்பு நீங்கி விட்ட விஷயத்தில் கவனம் உடையவனாய் இருக்க வேண்டும்.

இச்சரீரம் அழியும் வரையில் குற்றம் அற்றதும் இனியதுமாய் உள்ள வாழ்க்கையை கை கொள்ள வேண்டும்.

மன மகிழ்ச்சாக்காக பகவத் ஸ்ரீ ராமானுஜர் அருளிய ஸ்ரீபாஷ்யத்தை (வ்யாஸரின் ப்ருஹ்ம ஸூத்ர வ்யாக்யானம்) ப்ருஹ்ம வித்துக்களான பெரியோர்களுடன் அடிக்கடி பேசிக் கொண்டிருக்க வேண்டும்.

செவிக்கு இனிய செஞ்சொற்களாகிய ஆழ்வார்கள் அருளிச் செயலை எப்பொழுதும் அனுஸந்திக்க வேண்டும்.

தான் கற்றதை பிறருக்கும் எடுத்து கூறி மகிழ வேண்டும்.

இந்த சரணாகதனுக்கு, இங்குள்ள வாழ்க்கையில், ஒரு விதத்திலே சம்பந்தம் அற்று, மற்றொரு விதத்திலே சம்பந்தத்தோடு இருந்து கொண்டு தன் ஸ்வரூபத்திற்கு ஏற்ற மேற் சொன்ன செயல்களை உத்தரக்ருத்யமாக செய்ய வேண்டும்.

# ஸ்வாமி தேசிகன் *ரஹஸ்ய ரத்நாவளி* என்னும் க்ரந்தத்தில், ப்ரபன்னனுக்கு உத்தரக்ருத்யமாக, இங்குள்ள காலம், ஆக்ஞா கைங்கர்யங்களை செய்து போந்த பிறகு, அனுஷ்டிக்க வேண்டிய கைங்கர்யங்கள் :

***கைங்கர்யமாவது ஸ்வாமி உகந்த ஏவல் தொழில் செய்கையாலே இது யதா சாஸ்திரம் பண்ணினால் உகப்பாம்*** **-** இங்கு செய்யும் பகவத் கைங்கர்யமும் சாஸ்த்திர விதிப்படியே செய்ய வேண்டும்.

***பகவத் கைங்கர்யமும் பாகவத கைங்கர்யமும் சேர அனுஷ்ட்டிக்க அரிதான போது பரம புருஷார்த்த காஷ்டையான பாகவத கைங்கர்யமே உபாதேயம்*** **-** ஒரே காலத்தில் பகவத் பாகவத கைங்கர்யங்கள் செய்யும்படி நேர்ந்தால், பாகவத கைங்கர்யமே முதலில் அனுஷ்டிக்க ப்ராப்தம்.

***இவை இரண்டிலும் பிரதானம் ஆச்சார்ய கைங்கர்யம்*** **-** ஒரே காலத்தில் பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்யங்கள் செய்யும்படி நேர்ந்தால், ஆசார்ய கைங்கர்யமே முதலில் அனுஷ்டிக்க ப்ராப்தம்.

***இக் கைங்கர்ய பரனுக்கு பரமைகாந்திகள் உகந்த இடமே உசித ஸ்தானம்*** **-** சரணாகதன் பாகவதர்கள் உள்ள இடங்களிலேயே இருக்க வேண்டும்.

# ப்ரபன்னனுக்கு இங்குள்ள காலம், பகவத் த்வேஷிகளான ***ப்ரதிகூலர்களிடமும்*** லோக அநுபவமான உண்டியே உடையே என வாழ்ந்து போகும் ***அநுபயர்களுடமும்*** அந்வயம் கூடாது ; ஸ்வாமி தேசிகன், ***சாஸ்த்ரீய நியமனாதிகாரத்தில்*** விளக்குகிறார்.

***அர்த்த காமங்கள் அடியாக ப்ரதிகூலரை ஆதரித்து இருக்குமாகில், ராஜா ஸார்வபௌமனாய் இருக்க ராஜ மஹிஷி க்ஷூத்ர ஐந்துக்கள் பக்கலிலே மடிப் பிச்சை புக்கால், ராஜாவுக்கு அவத்யமாய் அத்தாலே அவளை அவன் வெறுக்குமாப் போலே எம்பெருமான் திருவுள்ளம் வெறுத்திருக்கும்***

*அர்த்த காமங்கள் அடியாக அநுபயரை ஆதரிக்குமாகில், ரத்னத்துக்கும் பாஷாணத்துக்கும் வாசி அறியாதாப் போலே இவனுக்கு பெற்ற ஞானம் கார்யகரமாயிற்றில்லை என்று அவன் அலனளவிலே எம்பெருமான் அநாதரித்திருக்கும்*

# ஆக, ப்ரபன்னனுக்கு உத்தரக்ருத்ய ப்ரகரணாமாவது, அதாவது சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு இங்குள்ள காலமாவது :

ஸ்வாமி தேசிகன், ப்ரமாணங்களைக் கொண்டு, ஒரு சரணாகதன் இங்குள்ள காலம் எவ்வாறு இருக்க வேண்டுமென விளக்கியுள்ளார். அதுவே உத்தரக்ருத்யம்.

*தரித்திருந்தேனாகவே தாரா கணப்போர், விரித்துரைத்த வெந்நாகத் துன்னை, - தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது*

அதாவது, திருமழிசைபிரான் அருளிச்செய்த நான்முகன் திருவந்தாதியில் கூறியபடி எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனது (ஸ்வரூப) தன்மை, (ரூப) உருவம், (குண) பண்பு, (விபூதி) சொத்துக்களைப் பற்றிய விஷயங்களை வாசித்தும், கேட்டும், வணங்கி, வழிபட்டும், பூஜித்தும் பொழுதை போக்க வேண்டுவதே உத்தரக்ருத்யம்.

*கார்க்கலந்த மேனியான் கைகலந்த ஆழியான், பார்க்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான், சீர்கலந்த சொல்நினைந்து போக்காரேல் சூழ்வினையின் ஆழ்துயரை, என்நினைந்து போக்குவரிப் போது?*

அதாவது, ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த பெரிய திருவந்தாதியில் கூறியபடி எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனது குணங்களை கூறும் ஸ்ரீஸூக்திகளை நினைத்துக் கொண்டு கர்மத்தினால் உண்டான இன்னல்களை ஜனங்கள் போக்கிக் கொள்ள வேண்டும், இல்லாவிடில் சம்சார துக்கத்தை எதை நினைத்துப் போக்குவது? என வேண்டுவதாய் உத்தரக்ருத்யம் அமைய வேண்டும்.

*ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்ய வேண்டும்நாம், தெழிகு ரல்அரு வித்திரு வேங்கடத்து, எழில்கொள் சோதி எந்தைதந்தை தந்தைக்கே*

அதாவது, நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில் கூறியபடி எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனின் அர்ச்சா வடிவத்தை இடைவிடாததாகவும், குற்றமற்றதாகவும் (குற்றம் என்பது, 'நான் செய்கிறேன்' என்ற எண்ணம், அது அஹங்காரம்; 'எனக்காக செய்கிறேன்' என்ற எண்ணம், அது மமகாரம்) செய்து போகிற கைங்கர்யத்தை எம்பெருமானின் சந்தோஷத்திற்காக என்ற எண்ணத்தோடு செய்ய வேண்டும்.

4. ஸ்ரீராமானுஜ க்ரந்தங்களோடு அத்யந்த அர்த்த விரோதம் கொண்டவர்கள் பூர்வபக்ஷிகள், என்பது ப்ரமாண பலத்தால் ஸித்தம் !

# *ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த பக்ஷம்* -

உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, *ப்ருஹ்ம ஸூத்ரம்* (4ம் அத்யாயம் 1ம் பாதம் 7வது அதிகரணம் 13ம் ஸூத்ரம்)

*ததகிம உத்தர பூர்வ அகயோ: அஸ்லேஷ வினாஷெள தத் வ்யபதேஷாத்*

என்கிறது. அதனை பகவத் ராமானுஜர், தனது க்ரந்தமான ஸ்ரீபாஷ்யத்தில் விளக்கியுள்ளார். அதாவது, இங்கு மோக்ஷத்தை விரும்பி பக்தி யோகமோ அல்லது சரணாகதி அனுஷ்டானமோ செய்பவர்களின் முன்பு செய்த பாபங்களும் பின்பு ஏற்படும் பாபங்களும் நீங்குவதை பிரித்து கூறப் படுகின்றன. இதையே, ஸ்வாமி தேசிகன் *ஸ்ரீ ரஹஸ்ய ரத்னாவளியில்*

***பிரபத்திக்கு கோரின பலத்துக்கு ஒன்றாலும் பிரதிபந்தம் இல்லை*** - எக்காரணத்தினாலும் சரணாகதனுக்கு மோக்ஷ பலன் கிட்டாமல் போகாது, என தெளிவு படுத்தியுள்ளார்.

# ***ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்*** -

ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், ***குன்றனைய குற்றஞ் செயினும் குணங்கொள்ளும்*** என்பதை எம்பெருமானின் வாத்ஸல்யமாவது,

***கேசவம் தோஷ போக்யம்***

என்கின்றனர். அதாவது 'அடியார்களின் குற்றங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறான் எம்பெருமான்' எனக் கூறுகின்றனர். அதனால் மோக்ஷத்திற்காக ஸாத்யோபாயமோ அல்லது தவற்றிற்கான ப்ரயஸ்சித்தமோ தேவை அற்றது என்பது பூர்வபக்ஷிகளின் பக்ஷம்.

# ***ஸ்வாமி தேசிகனின் பக்ஷம்*** -

சம்சார தசையில், ஞான சங்கோசத்தினால் உண்டாகி இருக்கும் விபரீதம் நீங்க ***அவித்யா நிவ்ருத்தி ரேவ ஹி மோஷ*** (விபரீத ஞானம் நிங்குவதே மோக்ஷ காரணமாகும்) என சொல்லப் படுகிறது ; இப்படி சொல்லப் படுகிற ***ஞானம் கிம் ரூபம் ?*** என பகவத் ராமானுஜர் ஶ்ரீ பாஷ்ய லகு ஸித்தாந்தத்தில் விளக்குகிறார். செயலுக்கு உட்படாத ஞானம் பலனுக்கு காரணமாகாது, என விளக்ககினார். ஸ்வாமி தேசிகன், ***ஸாத்யோபாய சோதனாதிகாரத்தில்*** விளக்கும் போது,

***இதுவும் (ஸித்தோபாய ப்ரதிபத்தியே மோக்ஷ காரணம் என்பதுவும்) வாக்ய ஜன்ய ஞான மாத்திரத்தாலே மோக்ஷமென்கை போலே அநாதரணீயம்***

என அருளினார். ஆக, பகவானுக்கு தாஸன் என்கிற ஸ்வ ஸ்வரூபத்தை, சம்சாரி ஜீவன் முதலில், ஆசார்ய உபதேசத்தாலே அறிய வேண்டும். அது ***வாக்ய ஜன்ய ஞானம்*** (சாஸ்த்திர வாக்கியத்தால் தெளிவிக்கும் அறிவு) - அதன் பிறகு, சாஸ்த்திரம் விதித்த, மோக்ஷ உபாயத்தை அனுஷ்டிக்க வேண்டியது. அது, ***விதிக்கு விஷயமானது*** ; மோக்ஷ உபாய சாஸ்த்திர விதிகள் பயனுள்ளதாக இருக்க, இதுவே, மஹரிஷியின் வரிக்கு தாத்பர்யம். ***சாஸ்த்திர விதிக்கு விஷயமாகாதது*** மோக்ஷ பலன் அளிக்க வல்லதாகாது. அதாவது அத்வைதிகள், சாந்தோக்ய உபநிஷத்தில் உள்ள ***தத்வமஸி*** (நீ அது ஆகிறாய்) போன்ற வரிகளின் அர்த்த ஞானமே ஜீவ-ப்ருஹ்ம ஐக்கியத்திற்கு, அவர்கள கூறும் மோக்ஷத்திற்கு, காரணம் என்பதை நிராகரித்து, ***அவிதேய ஞானம் மோக்ஷ ஸாதனம் என்பவர்க்கு, விதி விரோத தோஷங்கள் ஏற்படும்*** என தெளிவித்தார், ஶ்ரீ ராமானுஜர். அதே வழியில், சாஸ்த்திரம் விதித்த ஸாத்யோபாயத்தை விலக்கி, ஸித்தோபாயம் என்கிற எம்பெருமானின் ஞானமே மோக்ஷ காரணம் என்பது, அத்வைதிகளின் வாதத்திற்கு ஒக்க, பரிஹரணீயம் என ஸ்வாமி தேசிகன் அருளினார்.

(நாளை சரணாகதி கத்யம் தொடரும்)

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****

28.12.2022
புதன் கிழமை

1. பகவத் ராமானுஜரின் சரணாகதி கத்யம் - விளக்கம் - ***சூர்ணிகை எண் - 20***

***சரீர பாதஸமயே து கேவலம் மதீயயைவ தயயா அதி ப்ரபூத்த: மாமேவ அவலோக்யந் அப்ரச்யூத பூர்வ ஸமஸ்கார மநோரத: ஜீர்ணமிவ வஸ்த்ரம் ஸுகேந இமாம் ப்ரக்ருதிம் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபாம் விஸ்ருஜ்ய ததாநீமேவ மத் ப்ரஸாதலப்த மச்சரணாரவிந்த யுகள ஐகாந்திக அத்யந்திக பரபக்தி பரக்ஞான பரம பக்தி க்ருத பரிபூர்ண அநவரத நித்ய விஷததம அநந்ய ப்ரயோஜந அநவதிகாதிசய ப்ரிய மத் அநுபவஸ்த்வம் ததாவித மத் அநுபவ ஜநித அநவதிகாதிஷய ப்ரீதி காரித அசேஷ அவஸ்தோசித அசேஷ சேஷதைக ரதிரூப நித்ய கிங்கரோ பவிஷ்யஸி***

2. ***சூர்ணிகை பத உரை*** :

# ***சரீர பாதஸமயே து*** - சரீரத்திலிருந்து ஜீவன் பிரியும் போது

# ***கேவலம் மதீயயைவ தயயா*** - பகவத் க்ருபை ஒன்றினாலேயே

# ***அதி ப்ரபூத்த: மாமேவ அவலோக்யந்*** - பகவானை அறிந்துக் கொள்ளும் ஞானமானது

# ***அப்ரச்யூத பூர்வ ஸமஸ்கார மநோரத:*** - சரணாகதி அனுஷ்டான காலத்தில் நீர் ப்ரார்த்தித்தபடி

# ***ஜீர்ணமிவ வஸ்த்ரம் ஸுகேந இமாம் ப்ரக்ருதிம் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபாம் விஸ்ருஜ்ய*** - அழுக்கு அடைந்த வஸ்த்ரத்தை எப்படி ஜுகுப்ஸையோடு களைகிறோமோ அது போல ஹேயமான ப்ராக்ருத சரீரத்தைக் களைந்து

# ***ததாநீமேவ மத் ப்ரஸாதலப்த*** - பகவத் அருளினால் மீண்டும் ஒரு ப்ராக்ருத உடலைப் பெறாதபடி

# ***மச்சரணாரவிந்த யுகள ஐகாந்திக அத்யந்திக பரபக்தி பரக்ஞான பரம பக்தி க்ருத*** - பகவத் திருவடிகளை பற்றியபடியால் பர பக்த்யாதி பலன்களை பெறக் கொண்டு

# ***பரிபூர்ண அநவரத நித்ய விஷததம அநந்ய ப்ரயோஜந அநவதிகாதிசய ப்ரிய மத் அநுபவஸ்த்வம் ததாவித மத் அநுபவ*** - முழுமையான, தெளிவாக, நித்யமாக, வேறு பலன்களில் ஆசைகளற்றதாக, எல்லை அற்றதாக, பெருமையும் மேன்மையும் உடைய அநுபவமாக

# ***ஜநித அநவதிகாதிஷய ப்ரீதி காரித அசேஷ அவஸ்தோசித அசேஷ சேஷதைக ரதிரூப நித்ய கிங்கரோ பவிஷ்யஸி*** - உள்ளபடி அன்பினால் குறைவற்ற பகவத் கைங்கர்யம் விச்சேதமற்று கிடைக்கப் பெறுவீர் (இவ்வாறு பகவத் அனுக்ரஹமானது ப்ரபத்தி அனுஷ்டானத்திற்கு பிறகு அருளப் பெற்றது)

3. ***சூர்ணிகை விளக்கம்*** :

# நித்ய விபூதியில் உள்ள ஜீவர்களின் ***போக்த்ருத்வமும்*** பகவத் அதீனத்தில் உள்ளது ; பரிபூர்ண ப்ருஹ்மானுபவ அதிகாரத்தின் சுருக்கத்தை ஒரு ஸம்ஸ்க்ருத காரிகை மூலம் தெளிவு படுத்துகிறார் ஸ்வாமி தேசிகன்.

***விதமஸி பதே லக்ஷ்மீகாந்தம் விசித்திர விபூதிகம். ஸசிவ கமித: ஸம்பத்யாவிர்பவதி ஸஹஜ ஆக்ருதி: ஸ்புடதத் அப்ருதக் ஸித்தி: ஸித்யத் குணாஷ்டக தத்பலோ. பஜதி பரமம் ஸாம்யம் போகே நிவ்ருதி கதோஜ்ஜிதம்***

அதாவது,

இந்த ப்ரக்ருதிக்கு அப்பால் உள்ள ஸ்ரீவைகுண்டத்தில், வியக்க வைக்கும் இரண்டு விபூதிகைள (நித்ய விபூதி மற்றும் லீலா விபூதி) தன் வசத்தில்  கொண்டவனாகிய, மஹாலக்ஷ்மி பிராட்டியின் நாயகனான, ஸ்ரீமந் நாராயணன் நித்ய வாஸம் செய்து கொண்டு உள்ளான் . சரணாகதன், ஆதிவாஹிகர்களால் வழி நடத்தப்பட்டு, அவனை அடைகிறான்.

அப்போது அந்த ஜீவனுக்கு உண்டான இயற்கையான தன்மைகள் வெளிப்படுகின்றன.

அதாவது, பாப புண்ய கர்ம ஸம்பந்தத்தினால் ஏற்பட்ட சுருங்கிய ஞானம் அகன்று விடுகிறது. அனைத்தையும், அனைத்து கலத்திலும் உள்ளது உள்ள படி அறியும் தெளிவான ஞானம் உண்டாகிறது.

தான் எம்பெருமானை விட்டு ஒரு போதும் அகல முடியாதவன் என உணர்கிறான். பாபம் அற்ற தன்மை போன்ற ஜீவனுக்கு உண்டான இயல்பான எட்டு நற்குணங்களை கிடைக்கப் பெறுகிறான்.

எம்பெருமானுக்கு ஸமமான ஸுக அனுபவங்களைப் பெறுகிறான்.

கர்மத்தின் அடிப்படையில் ப்ராக்ருத லோகத்திற்கு வரமுடியாத நிலையையும் அடைகிறான்.

# மோக்ஷத்தை (பரமபதத்தை) அடைந்த ஜீவர்கள் பாப புண்ய கர்ம ஸம்பந்தங்களற்று, இயற்கை நிலையில், கீழ் உள்ள எட்டு (ஸர்வேஸ்வரனுக்கு நிகரான) ஸ்வபாவங்களோடு இருந்து போகிறார்கள்:

*அபஹதபாப்மத்வம்* - சாஸ்த்திர கட்டுப்பாடு, நித்ய விபூதியில் கிடையாது. ஆகையால், பாபம், (அதாவது சாஸ்த்திரத்தை மீறிய செயல்) என்பதிற்கு வழியே கிடையாது.

*விஜரத்வம்* -  அனைத்து காலத்திலும் அங்குள்ளவர்கள் இளமை பருவமுடையவர்களாகவே இருப்பார்கள். ஆக, கிழத்தனம் அங்கு யாருக்கும் கிடையாது.

*விம்ருத்யுத்வம்* - ஜீவர்கள் அனைவரும் உண்டாவதும் இல்லை, அழிவதும் இல்லை. ஆதலால் மரணம் என்ற சொல்லுக்கே வாய்ப்பு கிடையாது. (இங்குள்ள காலம், நித்யமான ஜீவர்களிடம் சரீர சேர்க்கையையே பிறவி என்றும், சரீரத்தை விடுவதையே மரணம் என்றும் கூறுகிறோம்)

*விசோகத்வம்* - பாபத்தினால் ஏற்படக்கூடிய சோகங்களுக்கு அங்கு வழி இல்லை. சாஸ்த்திர கட்டுப்பாடு, நித்ய விபூதியில் இல்லாத காரணத்தால்.

*விஜிகத்ஸத்வம்* - ஆகாரம் உட்கொள்வது சரீரத்திற்காக. இயற்கையில் ஆத்மாவிற்கு பசி கிடையாது.

*அபிபாஸத்வம்* - நீர் உட்கொள்வது சரீரத்திற்காக. இயற்கையில் ஆத்மாவிற்கு தாகம் கிடையாது.

*ஸத்யகாமத்வம்* -  இந்த உலகத்தில் விரும்பியதை அடையமுடியாமல் போவதற்கு காரணம், பாபங்களாகும். அங்கு, பாவம் என்பதிற்கு வழியே கிடையாது. ஆக, இயற்கையில் நினைத்ததை அடையும் தன்மை ஜீவர்களுக்கு உண்டு.

*ஸத்ய ஸங்கல்பத்வம்* - முயற்சி இல்லாமல் நினைத்த உடனேயே எண்ணங்கள் நிறைவேரும் தன்மை ஸகல ஜீவர்களுக்கும் இயற்கை. அந்த தன்மை அங்கே வெளிப்படுகிறது.

ஆக, பரமபதத்தை அடைந்த ஜீவன், ஸர்வேஸ்வரனின் திருவுள்ளத்தை நேரில் அறிந்து, அதற்கு அனுகுணமாக, தன் இஷ்டம் போல, தடையின்றி, செயல் பட்டு பகவத் கைங்கர்யாம் செய்து போகலாம் என்பது  தெளிவாகிறது.

# முண்டகோபநிஷத் வரிகளாவது,

*யதா பஷ்யத பஷ்யதே ருக்ம வர்ணம் கர்தாரமீசம் புருஷம் ப்ருஹ்ம யோநிம். ததா வித்வான் புண்யபாபே விதூய நிரஞ்சன: பரமம் ஸாம்யம் உபயிதி*

அதாவது, மோக்ஷ உபாயத்தை அனுஷ்டித்தவன், எப்போதும் ஜகத் காரணனான, அதி ஸுந்தர திருமேனி உடையவனான வாஸுதேவனைக் காண்கிறானோ அப்போதே புண்ய பாப கர்மங்களை உதரிவிட்டு பகவானுக்கு ஸாம்ய நிலையைப் பெறுகிறான் ; இதனை ஶ்ரீபாஷ்ய க்ரந்த த்தில் ப்ருஹ்ம ஸூத்ர வ்யாக்யானமாக, பகவத் ராமானுஜர்,

*போக மாத்ர ஸாம்ய லிங்காஸ்ச*

பரிபூர்ண ப்ருஹ்மானுபவம் போகத்தில் மட்டுமே, என அருளினார் ; ஸர்வேஸ்வரனான கண்ணன், கீதோபநிஷத்தில்  (14-2)

*இதம் ஜ்ஞாநமுபாஸ்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா: ஸர்கேSபி நோபஜாயந்தே ப்ரலயே ந வ்யதந்தி ச*

என அருளினான். அதாவது, மோக்ஷ உபாயத்தை அனுஷ்டித்தவன், பல தசையில் சொல்லப் படும் இந்த ஞானத்தைப் பெற்று அதனால் என்னியல்பு தன்மைகளைப் பெற்றோர் படைப்புக் காலத்தில், கர்ம அனுகுணமாக பிறவார் ; ப்ரளய காலத்தில் ஞான சங்கோசாதி உபாதிகளைப் பெறவும் மாட்டார்கள்.

4. ஶ்ரீராமானுஜ க்ரந்தங்களோடு அத்யந்த அர்த்த விரோதம் கொண்டவர்கள் பூர்வபக்ஷிகள், என்பது ப்ரமாண பலத்தால் ஸித்தம் !

# *ஶ்ரீ ராமானுஜ ஸித்தாந்த பக்ஷம்* -

ஶ்ரீ பாஷ்யம் - அவித்யா கல்பித ப்ருஹ்ம பக்ஷத்தில், சப்த வித அனுபபத்தி  - மகா பூர்வ பக்ஷம் - மகா சித்தாந்தம் வழியாக ஶ்ரீராமானுஜர்  நிர்தாரித்தார். ***ஏகமேவ அத்விதீயம்*** ( சாந்தோக்ய உபநிஷத்) - பரம்பொருள் ஒன்றே உளது; மற்ற எதுவும் கிடையாது.  அந்த அத்விதீயமான ப்ருஹ்மத்துக்கு ஏற்படும் நிலைகள்ளால் அனுபபத்தி :

***ஆஸ்ரய அனுபபத்தி*** குண ரஹிதமான விசேஷணம் அற்ற அத்வைத விளக்கமான ப்ருஹ்மத்துக்கு (நிர்குண ப்ருஹ்மம்) அவித்யை எவ்வாறு கூடும் ?

***திரோதான அனுப்பபத்தி*** குண ரஹிதமான விசேஷணம் அற்ற அத்வைத விளக்கமான ப்ருஹ்மத்துக்கு (நிர்குண ப்ருஹ்மம்) அக்ஞான திரோதானம் எவ்வாறு கூடும் ?

***ஸ்வரூப அனுபபத்தி*** மாறுதல்களுக்கு உட்படாத ப்ருஹ்ம ஸ்வரூபம் இயற்கை என்றால், அவித்யை விலகுவது எவ்வாறு ?

***அநிர்வசனீயத்வ அனுபபத்தி*** ப்ருஹ்மத்துக்கு அவித்யை இயற்கை இல்லை. செயற்கையும் இல்லை. என்பது எவ்வாறு ?

***ப்ரமாண அனுபபத்தி*** மற்றொன்று அற்ற ப்ருஹ்மத்தை எந்த ப்ரமாணத்தால் அறிவது ?

***நிவர்த்தக அனுபபத்தி*** அவித்யை பொய்யானால், பொய்யான ஒன்றை எவ்வாறு போக்க?

***நிவ்ருத்தி அனுபபத்தி*** உபாதையால் சூழ்ந்திருக்கிற ப்ருஹ்மத்தின், அக்ஞானத்தை யார் போக்க?

# *ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்* -

ஈஸ்வரனுக்கும் ஜீவர்களுக்கும், அசேதநங்களுக்கும் உள்ள ஒற்றுமை வாக்யங்களைத் தனிப்படுத்தினார் சங்கரர்.   அந்த வாக்யங்களை மஹாவாக்யங்கள் என குறிப்பிட்டார் சங்கரர்.  அதை விரோதிக்கும்

அனைத்து உபநிஷத் வரிகளும் அதற்கான பொருள்களும் ஏற்க தகுந்தவைகள் அல்ல, என தன் அத்வைத மதத்தை ஸ்தாபித்தார்.

அந்த வரிகளுக்கு சங்கரர் கூறிய விளக்கங்களாவது :

***ப்ரக்ஞானம் ப்ரஹ்ம*** (ரிக் வேதம் – ஐத்தரேய உபநிஷத்)

'உயர்ந்த ஞானமே ப்ரஹ்மன்' என்று பரமாத்மாவை அளவிடற்கரிய ஞானஸ்வரூபமாக ரிக் வேதம் காட்டுகிறது.

***அஹம் ப்ரஹ்மாஸ்மி*** (யஜுர் வேதம் -ப்ருஹதாரண்யக உபநிஷத்)

'நான் (அஹம்) ப்ரஹ்மாஸ்மி (பரப்ரஹ்மனாக இருக்கிறேன்)' என்று, ஜீவாத்மா பரமாத்மா வேறுபாடின்மையைக் குறிக்கிறது.

***தத்வமஸி*** (ஸாம வேதம் – சந்தோக்ய உபநிஷத்)

'நீயும் அதுவாக இருக்கிறாய்' என்ற பொருளைக் குறித்து, (உலக ரீதியில்) 'நீயும் அதே பரம்பொருளாய் இருக்கிறாய், என்கிறது இந்த வாக்யம்.

***அயமாத்மா ப்ரஹ்ம*** (அதர்வண வேதம் – மாண்டுக்யோபநிஷத்)

# ***ஸ்வாமி தேசிகனின் பக்ஷம்*** -

ஸ்வாமி தேசிகனின், ***சரமஸ்லோகாதிகார*** வரிகளாவது :

***சங்கராதி குத்ருஷ்டிகள் சொல்லும் பொருள்களை எல்லாம் தாத்பர்ய சந்த்ரிகையிலும் நிக்ஷேப ரக்ஷையிலும் பரக்க தூஷித்தோம்***

இதில், ***தாத்பர்ய சந்த்ரிகை*** அத்வைத கண்டனத்தை (ஜீவ ப்ருஹ்ம ஐக்ய வாதத்தை) ப்ரதானமாகக் கொண்டது ; ***நிக்ஷேபரக்ஷை*** (ஸாத்யோபாயத்தை அநுபாயம் என்கிற) ஸித்தாந்த ஏகதேசிகள் பக்ஷி கண்டனத்தை ப்ரதானமாகக் கொண்டது.

(நாளை சரணாகதி கத்யம் தொடரும்)

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****

29.12.2022
வியாழன் கிழமை

1. பகவத் ராமானுஜரின் சரணாகதி கத்யம் - விளக்கம் - ***சூர்ணிகை எண் - 21***

*மாதே பூதத்ர ஸம்ஷய*

2. ***சூர்ணிகை பத உரை*** :

பெரிய பிராட்டியை புருஷகாரமாகப் பற்றி, ஸாத்வீக த்யாகத்தோடு திவ்ய தம்பதிகளிடம் அனுஷ்டிக்கப் படும் சரணாகதிக்கு, பகவத் அனுக்ரஹ காரணமான பரம புருஷார்த்த பலன் ஸித்திக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை - அதாவது, ஒரு சிறிய செயலான ப்ரபத்தி, பல கோடி பிறவி ஹேதுவான சம்சார பிணியை போக்குமோ என்கிறதாகிற ஐயம் களையப் படுவதில் தாத்பர்யம்.

3. ***சூர்ணிகை விளக்கம்*** :

# ப்ரணவம் மூன்று அக்ஷரம் கோண்டது; அதாவது ***அ***, ***உ*** மற்றும் ***ம*** என்கிற அக்ஷரங்கள்.

கடோபநிஷத் கூறும் போது,

***அகாரேண உச்யதே விஷ்ணு: ஸர்வ லோகேச்வரோ ஹரி: உத்ருதா விஷ்ணுனா லக்ஷ்மி: உகாரேண உச்யதே ததா. மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்***

என்று

***அ*** என்பதால், ஸர்வ லோகங்களுக்கும் ஈஸ்வரனாகிய விஷ்ணு சொல்லப் படுகிறான்; ***உ*** என்பதால் பகவானோடு சேர்ந்தே இருக்கும் பெரிய பிராட்டியான மஹா லக்ஷ்மி சொல்லம் படுகிறாள்; அந்த திவ்ய தம்பதிகளுக்கு ***ம*** என்பதால் சொல்லப் படுகிற ஜீவன் தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கும், எனப் பொருளாகிறது.

# ***அ*** என்கிற பதம் ஸம்ஸ்க்ருத அகராதியில் விஷ்ணுவைக் குறிக்கும். அந்த ***அ*** என்கிற அக்ஷரத்திற்கு, ***அவ ரக்ஷணே*** என்கிற தாதுப் படி, ***ரக்ஷகன்*** என்கிற பொருள் கிடைக்கும். இந்த ரக்ஷகத்வம் எந்த வரையறையும் தன்னிடம் கொள்ளாததால், இது பகவானின் நிர்ஹேதுக க்ருபையால் வரும் ***ஸர்வ ஜீவ சாமான்ய ரக்ஷகத்வம்*** என நம் பூர்வர்கள் விளக்கியுள்ளனர். அதாவது, அவனது நிர்ஹேதுக க்ருபைக்கு விஷயமான ஸகல ஜீவர்களையும் நித்யமாக வைத்தல், சம்சாரி ஜீவர்களுக்கு சரீர இந்த்ரியங்களைக் கொடுத்தல், சாஸத்திரத்தை கொடுத்தருளுதல், பரம புருஷார்த்த பலன் பெறுவதுற்காக, அகிஞ்சனனான சம்சாரி ஜீவர்களுக்கு, லகு உபாயத்தை விதித்தல் போன்றவைகளாகும்.

ஆக, சம்சாரி ஜீவர்களின் மோக்ஷார்த்த ப்ராப்த்த்திக்கான, உபாயத்தை ***அ*** என்கிற அக்ஷரத்தினால் அறிய ஒண்ணாது. ஆனால், மற்ற ப்ரமாணல்களினால், ஸாத்யோபாயம் சாஸ்த்திர விஹிதமே என தெளிய வேண்டும். இவ்விஷயத்தை, ஸ்வாமி தேசிகனின் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் ***மூல மந்த்ராதிகாரத்தில்*** உள்ள வரிகள் தெளிவிக்கின்றன:

***இந்த ரக்ஷகத்வம் அவச்சேதகமில்லாமையாலே ஸர்வ விஷயம். ரக்ஷா ப்ரகாரங்கள் விஷயங்கள் தோறும் ப்ரமாணங்கள் காட்டினபடியிலே விசித்திரங்களாயிருக்கும். இது ஹேது நிர்தேஷம் பண்ணாமையாலே நிரூபாதிகமாய் தோன்றினாலும் ஸாபராத சம்சாரிகளுக்கு மோக்ஷாதிப்ரதானத்தில் ஸ்வதந்தரனான ஈஸ்வரன் தான் ஸங்கல்பித்து வைத்ததொரு வ்யாஜத்தை அபேக்ஷித்திருக்கும்***

# ஸர்வேஸ்வரன் சம்சாரி ஜீவர்கள் விஷயத்தில் உபாயமாக இருந்து ரக்ஷிக்கிறான் என்பது, ***நாராயண*** பதத்தில் உள்ள ***அயன*** சப்தம் காட்டுகிறது.

இவ்விஷயத்தை, ஸ்வாமி தேசிகனின் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் ***மூல மந்த்ராதிகாரத்தில்*** உள்ள வரிகள் தெளிவிக்கின்றன:

***எங்கனேயென்னில் ‘இண் கதௌ’ என்கிற தாதுவிலே ‘இயதே அனேன’ என்று அயன சப்தத்தில் கரண வ்யுத்பத்தியாலே ஈஸ்வரன் உபாயமாயும்***

என கூறப்பட்டிருக்கிறது. அதாவது ஈஸ்வரன் ஸித்தோபாயமாகிறான் என்பது தெளிவு.

ஆனால், உபாயம் என்பது ஸித்தோபாயமென்றும் ஸாத்யோபாயமென்றும் சொல்லப் படுகிறது.

இவ்விஷயத்தை, ஸ்வாமி தேசிகனின் ***ரஹஸ்ய ரத்னாவளி ஹ்ருதயம்*** உள்ள வரிகள் தெளிவிக்கின்றன:

***ப்ராப்தி உபாயமாவது இஜ்ஜீவன் சம்சார ஸாகரத்தைக் கடந்து அக்கரைப் படுகைக்கு அனபாய ஸாதனமாக ஸ்வ புத்தியாலே கோரும்படி சாஸ்த்தர உக்தமான அர்த்தம். இது ஸித்தமென்றும் ஸாத்யமென்றும் இரண்டு படியாய் இருக்கும்***

ஸாத்யோபாயாமான சரணாகதி அனுஷ்டானம், அகிஞ்சனன் விஷயத்தில் மோக்ஷ காரணம் என்பது ***நம:*** என்கிற ப்ரமாண ஸித்தம்.

இவ்விஷயத்தை, ஸ்வாமி தேசிகனின் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் ***ஸாத்யோபாய சோதனாதிகாரத்தில்*** உள்ள வரிகள் தெளிவிக்கின்றன:

***நமஸ்ஸூ ஆத்மநிக்ஷேபபரமென்னுமிடம் 'நமஸ்காராத்மகம் யஸ்மை விதாய ஆத்ம நிவேதனம்' இத்யாதிகளிலே ப்ரஸித்தம். ஶ்ரீவைகுண்ட கத்யத்தில் 'ப்ரார்த்தனாபூர்வகாத்மநிக்ஷேபம்' கண்டோக்தமாயிற்று***

# ஸ்வாமி தேசிகன், இவ்விஷயத்தை ***ஸித்தோபாய சோதநாதிகாரத்தில்*** விளக்குகிறார்.

***இப்படிப் பட்ட க்ருபாவிசிஷ்டனான ஈஸ்வரன் 'க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம்' என்கிறபடியே ஸித்தோபாயம். இவனுக்குப் ப்ரஸாதனதங்களான பக்தி ப்ரபத்திகள் ஸாத்யோபாயங்கள்***

ஆக, ஐஹிக ஆமுஷ்மிக மோக்ஷ பலன்களை அளிப்பவன் ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன்; அந்த பலன்களைப் பெற சம்சாரி ஜீவர்கள் செய்ய வேண்டிய செயல்கள் வேத வேதாந்தங்கள் விளக்குகின்றன;

இதுவே ஸநாதன தர்மத்தின் முக்கிய அம்சம்.

ஸ்வாமி தேசிகன் ***ஸித்தோபாய சோதனாதிகாரத்தில்***, ஸாத்யோபாய அனுஷ்டான நோக்கை அருளியுள்ளார்;

***பக்தி ப்ரபத்தி ப்ரமுகம் தத் வசீகார காரணம் தத் பலார்த்தி ஸாத்யத்வாத் ஸாத்யோபாயம் விதுர்புத:***

அதாவது,

ஸித்தோபாயனான எம்பெருமானை வசீகரிக்க பக்தி, ப்ரபத்தி காரணமாகிறது; அந்த ஸாத்யோபாயம் பலனை அபேக்ஷிப்பவர்களால் செய்ய வேண்டுவதாகிறது.

***ப்ரபத்தி*** பற்றி தெளிவாக ஸ்வாமி தேசிகன் ***சரமஸ்லோகாதிகாரத்தில்*** அருளியுள்ளார் :

***சுதுஷ்கரேண ஷோசேத்யோ யேன யேன இஷ்ட ஹேதுநா ஸ ஸ தஸ்யாம் அஹம் ஏவ இதி சரமஸ்லோக ஸங்க்ரஹ:***

அதாவது,

எவன் தனக்கான இஷ்ட பலனுக்கு ஒரு விதிக்ப் பட்ட சாதன உபாயத்தை செய்ய முடியாமல் வருந்துகிறானோ, அவனுக்கு அந்த சாதனம் நானே என்பதே சரமஸ்லோகத்தில் திரண்ட பொருள்.

4. ஶ்ரீராமானுஜ க்ரந்தங்களோடு அத்யந்த அர்த்த விரோதம் கொண்டவர்கள் பூர்வபக்ஷிகள், என்பது ப்ரமாண பலத்தால் ஸித்தம் !

# *ஶ்ரீ ராமானுஜ ஸித்தாந்த பக்ஷம்* -

உபநிஷத் சாரமான ப்ருஹ்ம ஸுத்ரங்களில்

***கர்தா சாஸ்த்ரார்த்தவத்வாத்; பராத் து தச்ருதே***

என வ்யாஸ பகவான் அருளினார். அதாவது, சாஸ்த்ரம் கூறுவதால் ஜீவன் செயல் புரியும் தன்மை உள்ளவன். ஆனால் ஜீவனுடைய செயல் புரியும் தன்மை பகவத் அதீனம். இதையே இந்த ஸுத்ரங்களுக்கு வ்யாக்யானமாக ஶ்ரீராமானுஜராலும் ஶ்ரீபாஷ்யத்தில் விளக்கப்படுகிறது. ஆக, சாஸ்த்தரங்களில் விதிக்கப்பட்ட, பக்தி யோகம் மற்றும் சரணாகதி அனுஷ்டானத்தை, மோக்ஷ பலனுக்காக அனுஷ்டிக்க வேண்டுவதாகிறது. ஆக, தான் விதித்த ஸாத்யோபாய அனுஷ்டானத்தினாலேயே ஸித்தோபாயனான எம்பெருமான் பலனளிக்கிறான், என்பது வேத மார்க்கம்; வ்யாஸ ஸித்தாந்தம்; பகவத் ராமானுஜ ஸம்ப்ரதாயம்.

இவ்விஷயத்தை மேலும், உபநிஷத் சாரமான வேதவ்யாஸர் அருளிய ***ப்ருஹ்ம ஸுத்ரங்களும்*** அறுதியிடுகின்றன. ஶ்ரீ பாஷ்யத்தில் ***ஸாதனாத்யாயமே*** அனுஷ்டானத்தோடு கூடிய மோக்ஷத்திற்கான வழி!

அதாவது,

***நாநா சப்தாதி பேதாத்***

பெயர் வேறுபட்டிருப்பதால், மோக்ஷத்தை அடைவிக்கிற ப்ருஹ்ம வித்யைகள் வெவ்வேறானவை, என்றும்,

***விகல்போ அவிஸிஷ்ட பலத்வாத்***

அனைத்து ப்ருஹ்ம வித்யைகளும் ஒரே மோக்ஷ பலனையே கொடுக்கும், போன்ற ப்ருஹ்ம ஸுத்ரங்களைக் கொண்டு, 32 ப்ருஹ்ம வித்யைகளில் இருக்கிற உபாஸனமோ அல்லது ந்யாஸ வித்யையோ (சரணாகதி அனுஷ்டானமோ) மோக்ஷத்திற்கு உபாயமாகிறது என தெளியலாம் ; மோக்ஷ உபாயமாக சாஸ்த்திரங்கள் விதிப்பது ப்ருஹ்ம வித்யை : அதாவது, ***உபாஸநம்*** (பக்தி யோகம்) மற்றும் ***ந்யாஸ வித்யை*** (ப்ரபத்தி அல்லது சரணாகதி அனுஷ்டானம்)

# *ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்* -

உபநிஷத் சாரமான ப்ருஹ்ம ஸுத்ரத்துக்கு வ்யாக்யானமான பகவத் ராமானுஜரின் ***ஶ்ரீ பாஷ்ய, கீதா பாஷ்ய கத்யாதிகளில்***, சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை மோக்ஷ காரணமாக விதித்து வெளியிட்ட போதும், அந்த ஆசார்யோத்தமரின் க்ரந்த விரோதமாக, ஸித்தோபாய ப்ரதிபத்தி மட்டுமே மோக்ஷ காரணம் என்று நிர்தேசிக்கிறார்கள் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், என்பதனை முமுக்ஷுப்படி க்ரந்தங்களைக் கொண்டு தெளியலாம் :

***அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகம்*** (எண் - 231) - அதாவது இவ்வாத்மாவினுடைய ரக்ஷணத்திற்கு கடவனான அவன் 'இவனை நாம் ரக்ஷிக்கக் கடவோம்' என்று அபிமானித்துக் கொள்ளுகையாகிற ஸ்வீகாரமே இவனுக்கு ரக்ஷகமாய் அறுவது.

வேத மார்க்கமான பகவத் ராமானுஜரால் ஶ்ரீபாஷ்ய கத்யாதிகளில் சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை விளக்கி இருக்க, ஸாத்யோபாயத்தை நிஷேதித்து விளக்குவது, பூர்வபக்ஷிகளின் ஸம்ப்ரதாய விரோத நோக்கம். அசாஸ்த்ரீயம்.

# *ஸ்வாமி தேசிகனின் பக்ஷம்* -

ஸ்வாமி தேசிகன் ***ஸாத்யோபாய சோதன அதிகாரத்தில்*** ,

***இப்படி அங்க பஞ்சக ஸம்பன்னமான ஆத்ம ரக்ஷா பரந்யாஸமே ப்ரபத்தி சாஸ்த்திரம் எல்லாவற்றிலும் ப்ரதானமான விதேயம் என்று ஶ்ரீவிஷ்ணுசித்த, வாதிஹம்ஸாம்புவாஹ வரதாசார்யாதிகள் ஸங்க்ரஹித்தார்கள்***

என அருளியுள்ளார். இதன் பொருளாவது: சாஸ்த்தர வரிகளின் நோக்கத்தை ஆராயும் போது, ஐந்து அங்கங்களோடு கூடிய, ஆத்ம ஸமர்ப்பணமாகிய சரணாகதி அனுஷ்டானமே, மோக்ஷ ஸாதனமாக சொல்லப் படும் ப்ரமாணங்கள் அனைத்திலும், முக்கியமாக அனுஷ்டிக்க வேண்டிய விதியாக, எங்களாழ்வான் (ஸ்வாமி தேசிகனுக்கு ப்ராசார்ய பரம்பரையில் உள்ளவரும்), ஸ்வாமி தேசிகனின் சாக்ஷாத் ஆசார்யரும், மாதுலனும் (மாமாவும்) ஆன கிடாம்பி அப்புள்ளார், கிடாம்பி அப்புள்ளாரின் சாக்ஷாத் ஆசார்யனான நடாதூர் அம்மாள் - மற்றும் பல ஶ்ரீராமானுஜ க்ரந்த வழி மாறாமல் வந்த ஸதாசார்யர்கள், இவ்விஷயத்தை, அதாவது ஐந்து அங்கங்களோடு கூடிய சரணாகதி அனுஷ்டானமே மோக்ஷ ஸாதநம் என, விளக்கி அறிவுறுத்தினர்.

மேலும், ஸ்வாமி தேசிகன், ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில்,

***உடையவன் உடமையை ரக்ஷிக்கையும், ஸமர்த்தன் அஸமர்தனை ரக்ஷிக்கையும் ப்ராப்தமிரே. ரக்ஷிக்கும் போது கர்ம வஸ்யரை ஒர் உபாயத்தில் மூட்டி ரக்ஷிக்கை ஈஸ்வரனுக்கு ஸ்வ ஸங்கல்ப நியதம்***

என அருளினார்.

அதாவது, ஸர்வ ஸ்வதந்தரனான ஶ்ரீமந் நாராயணன், தன்னுடைய உடமைகளான ஜீவர்களை ரக்ஷிப்பது, அவன் ஸ்வரூபதற்கு ப்ராப்தம்; சாஸ்த்திர சம்மதம்; அப்படி ரக்ஷிக்கும் போது, அந்த ஜீவர்களிடம் ஒரு செயலை, அந்த ஸ்வதந்தரனான ஸர்வேஸ்வரன் சாஸ்த்திரங்களில் விதித்து, அதன்படி ஜீவர்களிடம் ஒரு அனுஷ்டானத்தை எதிர்பார்ப்பதில், அவனுக்கு ஒரு குறையுமில்லை. ஆக, ப்ரபத்தி அனுஷ்டானம் மோக்ஷ பல ஹேது என்பது சாஸ்த்திர ஸம்ப்ரதாய ப்ரமாண ஸித்தமாகையால் இதில் ஐயமடைய ப்ரசக்தி இல்லை.

(நாளை சரணாகதி கத்யம் தொடரும்)

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****

30.12.2022
வெள்ளி கிழமை

1. பகவத் ராமானுஜரின் சரணாகதி கத்யம் - விளக்கம் - ***சூர்ணிகை எண் - 22***

***அந்ருதம் நோக்த பூர்வம் மே ந ச வக்ஷியே கதாசன ; ராமோ த்விர் நா: அபிபாஷதே ; ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ் மீதி ச யாசதே அபயம் ஸர்வ பூதேப் யோததமாம் ஏதத் வ்ரதம் மம ; ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ அஹம் தவா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச: ; இதி மயைவ ஹ்யுக்தம்***

2. *சூர்ணிகை பத உரை* :

# *அந்ருதம் நோக்த பூர்வம்  மே ந ச வக்ஷ்யே கதாசன* - ஆஸ்ருத வத்ஸலனான என் வார்த்தைகளில் பொய் என்பது கிடையாது ; முன்பும் சொன்னதில்லை ; இனியும் சொல்ல மாட்டேன்.

# *ராமோ த்விர் நா: அபிபாஷதே* - மோஹன சாஸ்த்திரத்தை அருளியவன் பகவானே ஆயினும், சரணாகத வத்ஸலனான ஸ்ரீராமனின் வாக்குகளில் சாஸ்த்திர விதிகளுக்கு உட்படாத இரண்டு வேறுபட்ட கருத்துக்கள் நிச்சயமாக வராது (ஸ்ரீராமனுக்கு இரண்டு நாக்கு கிடையாது)

# *ஸக்ருதேவ  ப்ரபந்நாய தவாஸ் மீதி ச யாசதே அபயம் ஸர்வ பூதேப் யோததமாம் ஏதத் வ்ரதம்  மம* - ஒரு முறை என்னை சரண் அடைந்தால், அவனை எக்காரணத்தினாலும் கை விட மாட்டேன்; இது என் வ்ரதம் (ஸ்ரீராம சரமஸ்லோகம்)

# *ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ அஹம் தவா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:* - மோக்ஷ ஸாதனமான அனைத்து நிவ்ருத்தி தர்மங்களையும் விட்டு என் ஒருவனையே சரணமாக பற்று. நான் உன்னை மோக்ஷத்திற்கு விரோதியான புண்ய பாபங்களிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கிறேன். சோகப் படாதே (ஸ்ரீ க்ருஷ்ண சரமஸ்லோகம்)

*இதி மயைவ ஹ்யுக்தம்* - இந்த இரண்டு சரமஸ்லோகங்களாலும் சரணாகதி அனுஷ்டான பலனை நான் தெளிவாக்கியுள்ளேன் ; அதனால் தேவரீருக்கு சந்தேகம் வேண்டாம்.

3. *சூர்ணிகை விளக்கம்* :

# பகவத் கீதை அத்யாயம் 7- ஸ்லோகம் 15ல், ஸர்வேஸ்வரனான கண்ணன், பாப விசேஷத்தால், அவனை விட்டு அகல்பவர்களை நான்கு விதமாக பிரித்து விளக்குகிறான்.

***ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: மாயயாபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பாவமாஸ்ரிதா:***

அதாவது,

என் ஞானமில்லாத மூடர்கள், ஞானமிருந்தும் என்னை அடைய முயற்சிக்காதவர்கள், ஹைதுகர்களோட (யுக்தி வாதம் செய்பவர்களோட) ஈடுபாட்டால் உண்டான ஞானத்தை இழந்தவர்கள் மற்றும் என்னிடம் த்வேஷம் உள்ளவர்கள்.

பாபாத்மாக்களை தண்டிக்க, வராஹ புராணத்தில், ஸர்வேஸ்வரன் ருத்ரனிடம் கூறுவதாவது,

***த்வம் ஹி ருத்ர மஹாபாஹோ மோஹ சாஸ்த்ராணி காரய தர்ஷயித்வா அல்பம் ஆயாஸாம் பலம் சீக்ரம் ப்ரதர்சய***

ருத்ரனே ! நீ ஜனங்களுக்கு மோஹம் உண்டாகும் படியான (உண்மையான ஸர்வவேஸ்வரனை உணர முடியாதவாறு) சாஸ்த்திரங்களைச் செய்; அல்பமான செயல்களுக்கு உலக பலன்களை கிடைப்பதற்கு வழி காட்டு.

இவ்வாறு, பாபாத்மாக்களை தண்டிக்கும் பொருட்டு, மோஹன சாஸ்த்திரங்கள் வெளியாகின்றன.

ஸர்வேஸ்வரனான கண்ணன், சாஸ்த்திர விரோதமாக செயல்படும் அசுர குணம் உடையவனுக்கு ஏற்படும் கதி என்ன என்று பகவத் கீதையில் (16-19) உறுதி படுத்துகிறான்.

***தானஹம் த்விஷத: க்ரூரான் சம்சாரேஷூ நராதமான். க்ஷிபாம்யஜஸ்ரம் அசுபான் ஆஸுரீஷ்வேவ யோனிஷூ***

அதாவது, சாஸ்த்திர விரோத செயல்களில் ஈடுபடுவோரை நான் கடுமையாகத் தண்டிக்கிறேன், அசுர யோனியில் பிறக்க செய்கிறேன், என்கிறான் கண்ணன்.

அம்மாதிரியான தண்டனைகள், அடியார்களின் குற்றங்களுக்கு, பகவத் கருணையால், சம்பவிக்காது, என்பதில் தாத்பர்யம்.

# அதனால், ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிப்பவர்கள் நால்வர் என்பதை கண்ணன் பகவத் கீதையில் (7-16) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

*சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுஹ்ருதினோர்ஜுந. ஆர்த்தோ ஜிக்ஞாஸு அர்தார்த்தி ஞானி ச பரதர்ஷப:*

அதாவது, என்னை (கண்ணனை) பூஜிப்பவர்கள் நால்வர்: 1. இழந்ததை பெற நினைப்பவன்.2. ஆத்ம ஸ்வரூபத்தை அநுபவிக்க ஆசைபடுபவன்.3. புதிய ஐஸ்வர்யத்தை வேண்டுபவன் 4. என்னையே அடைய விரும்புபவன்.

# ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிப்பவர்களில் ஞானி ஏற்றமுடையவன் என்பதை கண்ணன் பகவத் கீதையில் (7-17) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

*தேஷாம் க்ஞானி நித்ய யுக்த ஏக பக்தி விஷிர்ஷ்யதே. ப்ரியோஹி க்ஞாநிநோர்த்யர்தம் அஹம் ஸ ச மம ப்ரிய:*

அதாவது, அவர்களுக்குள் ஞானி என்பவன் எனக்கு பிரியமானவன். ஏனெனில் அவன் என்னுடனேயே இருக்க ப்ரிய படுபவன். மற்றவர்கள் பலன் கிடைத்ததும் விலகுவார்கள்.

# ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிப்பவர்களில் ஞானி ஏற்றமுடையவன் என்பதை கண்ணன் பகவத் கீதையில் (7-18) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

*உதாரா: ஸர்வ ஏவைதே ஞானித்வாத்மைவ மே மதம்.ஆஸ்தித: ஸஹி யுக்தாத்மா மாமேவாநுக்தமாம் கதிம்*

அதாவது, என்னை (கண்ணனை) பூஜிப்பவர்கள் நால்வரும் கொடையாளர்கள். அதில் ஞானி எனக்கு ஆத்மா. இது என் ஸித்தாந்தம்.

# ***ஸ்ரீமத் ராமாயணம்*** என்னும் போது, ***ஸ்ரீ*** என்பதால், பரம புருஷார்த்தம் பெற, அகிஞ்சனான சம்சாரி ஜீவர்களுக்கான லகு உபாயம் விவரிக்கப் பட்ட இதிஹாஸமானபடியால், ***ஞானச் செல்வம்*** உள்ளது என்றபடியும். மதுப் ப்ரத்யயத்தால், ***சிறந்தது*** என அர்த்தம் த்வனிக்க, மோக்ஷ உபாயமாக பகவத் வாசக விஷயங்களான சரணாகதி அனுஷ்டானம் விதிக்கப் பட்டிருக்கிறது, என்பதாகிறது.

சுக்ரீவன், விபீஷணனை எதிரி தரப்பிலிருந்து வந்த காரணத்தால் அதில் சூழ்ச்சி இருக்கக் கூடும் எனக் கருதி, அவனை ஏற்பதற்கு மறுத்து, ஸ்ரீராமனிடம் வாதிடுகிறான். அதற்கு சரணாகத ரக்ஷகனான ஸ்ரீராமன் பதில் உரைக்கிறான். அதாவது, சரண்யனுக்கு தேவையான பரத்வம் மற்றும் ஸௌலப்யம் உடையவன் என்பது தெளிவிக்கப் படுகிறது ; இந்த ஸ்ரீராமனின் வரிகள் ஒவ்வொரு சரணாகதனின் சங்கைகளையும் களைய காரணமாகிறது.

*பிஷாஷான் தானவான் யக்ஷான் ப்ருதிவ்யான் சைவ ராக்ஷஸான். அங்குள் அக்ரேந தான் அன்யன் இச்சன் ஹரிகணேஸ்வர*

அதாவது, 'வானர தலைவனே! வந்தவன் யாராக (யக்ஷனாகவோ, தேவனாகவோ, ராக்ஷஸனாகவோ) இருந்தாலும் சரி, அவர்களால் துன்பம் வர நேர்ந்தாலும், அவர்களை விரல் நகத்தினாலேயே அழித்து என்னை நான் காத்துக் கொள்ள முடியும்'. இங்கே ***பரத்வம்*** தெளிவிக்கப் படுகிறது.

***மித்ரபாவேன ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சன. தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத் ஸதா வேதத் அஹர்ஹிதெள***

அதாவது, 'தோழனாக வேடம் தரித்து ஒருவன் என்னிடம் வந்தால் கூட, அவன் தோஷமுள்ளவனாயினும், அவனை நான் காத்தருள்வேன்'. இங்கே ***ஸெளலப்யம்*** தெளிவிக்கப் படுகிறது.

***ஸக்ருதேவ ப்ரபன்னாய தவாஸ்மீதிச யாசதே. அபயம் ஸர்வ பூதேப்யோ ததாமி யேதத் வ்ரதம் மம***

அதாவது, 'என்னிடம் ஒரு முறை, 'நான் உன்னுடையவன்' என்று ஒருவன் சரண் புகுந்துவிட்டால், அவனை காத்தருள்வது எனது வ்ரதம்'. இங்கே ***பரத்வம் மற்றும் ஸெளலப்யம்*** தெளிவிக்கப் படுகின்றன.

***அனயனம் ஹரி ஸ்ரேஷ்ட தத்தமஸ்யாம் அபயம் மயா. விபீஷணோவா ஸுக்ரீவ யதிவா ராவணஸ்வயம்***

அதாவது, ' வானர தலைவனே! விபீஷணனை நான் ஏற்றுக் கொண்டு விட்டேன் எனக் கூறு. நீ விபீஷணனை சந்திக்கும் தருணத்தில், அங்கு ராவணன், மனம் மாறி வந்திருந்தானேயானால், அவனையும் நான் மன்னித்து ஏற்றுக் கொண்டதாக கூறுவாயாக'. இவ்வாறு ஸ்ரீராமன் பதிலளித்தான். இங்கே ***ஸெளலப்யம்*** தெளிவிக்கப் படுகிறது.

ஆக, சரணாகத வத்ஸலனான எம்பெருமான், சரணம் என்று சாஸ்த்திரம் விதித்த வகையிலே, அவன் திருவடிகளைப் பற்றி நிற்பவனை, எக்காரணத்தினாலும் புறக்கணிக்க மாட்டான்.

4. ஸ்ரீராமானுஜ க்ரந்தங்களோடு அத்யந்த அர்த்த விரோதம் கொண்டவர்கள் பூர்வபக்ஷிகள், என்பது ப்ரமாண பலத்தால் ஸித்தம் !

# ***ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த பக்ஷம்*** -

பகவத் ராமானுஜர், சரணாகதி கத்யத்தில், ***ஸ்ரீமந் நாராயணா ! அஸரண்ய சரண்யா ! அநந்ய சரண: த்வத் பாதாரவிந்தயுகளம் சரணம் அஹம் ப்ரபத்யே!*** என மோக்ஷ உபாயமாக, சரணாகதி அனுஷ்டித்தார் ; உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, ***ப்ருஹ்ம ஸூத்ரம்*** (4ம் அத்யாயம் 1ம் பாதம் 7வது அதிகரணம் 13ம் ஸூத்ரம்)

***ததகிம உத்தர பூர்வ அகயோ: அஸ்லேஷ வினாஷெள தத் வ்யபதேஷாத்***

என்கிறது. என்தனை ஸ்ரீபாஷ்யத்தில் விளக்குகிறார், ஸ்ரீ ராமானுஜர் ; அதாவது, இங்கு மோக்ஷத்தை விரும்பி ப்ருஹ்ம வித்யையை (பக்தி யோகமோ அல்லது சரணாகதி அனுஷ்டானமோ) செய்பவர்களின் முன்பு செய்த பாபங்களும் பின்பு ஏற்படும் பாபங்களும் நீங்குவதை இரு வகையாக பிரித்து கூறப் படுகின்றன.

ஆக, ஸாத்யோபாயம் அனுஷ்டேயம் என்பது வேத மார்க்கம் ; வ்யாஸ ஸித்தாந்தம் ; ஸ்ரீ ராமானுஜ தர்சனம்.

# ***ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்*** -

சரணாகதி அனுஷ்டானம் அநுபாயம் என்றும், ஸித்தோபாய ப்ரதிபத்தியே மோக்ஷ காரணம் என கூறும் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், புத்தி பூர்வக அபசார பரிஹாரமான ***புந: ப்ரபத்தியை*** பாதக சப்தம் கொண்டு நிந்திக்கப்படுகிறது என்கிற வ்யாக்யானம் முமுக்ஷூப்படி 253 சூர்ணிகை -

***கலங்கி உபாய புத்யா பண்ணும் ப்ரபத்தியும் பாதகத்தோடே ஒக்கும்***

என்பதால் உணர்த்தப் படுகிறது.

# *ஸ்வாமி தேசிகனின் பக்ஷம்* -

ஸ்வாமி தேசிகனின் *அதிகாரி விபாக அதிகார* வரிகள் :

***இப்படி பரம புருஷார்த்த உபாயங்களான நிவ்ருத்தி தர்மங்களிலே ப்ரவ்ருத்தரான அதிகாரிகள் இருவர் ; அவர்களாகிறார் அத்வாரக ப்ரபத்தி நிஷ்டனும் ஸத்வாரக ப்ரபத்தி நிஷ்டனும்***

அதாவது, இப்படிப்பட்டமோக்ஷ பலனான நிவ்ருத்தி தர்மத்திலே இச்சை கொண்ட அதிகாரிகள் இரு வகையாக சாஸ்த்திரங்கள் கூறுகின்றன:

***அத்வாரக ப்ரபத்தி நிஷ்டன்*** (மோக்ஷத்திற்காக செய்யப்படும் சரணாகதி)

மற்றும்

***ஸத்வாரக ப்ரபத்தி நிஷ்டன்*** (மோக்ஷ பலனுக்கான பக்தி யோகம் தடைபடாமல் இருக்க செய்யப்படும் சரணாகதி)

(நாளை சரணாகதி கத்யம் தொடரும்)

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****

31.12.2022
சனி கிழமை

1. பகவத் ராமானுஜரின் சரணாகதி கத்யம் - விளக்கம் - ***சூர்ணிகை எண் - 23***

***அதஸ் த்வம் தவ தத்தவத: மத் ஞான தர்சன ப்ராப்திஷு நிஸ்ஸம்சய: ஸுகமாஸ்வ***

2. ***சூர்ணிகை பத உரை*** :

# ***அதஸ் த்வம்*** - இவ்வாறு தேவரீர் சரணாகதி அனுஷ்டித்து பலனுக்கு என்னையே விச்வசித்த பிறகு

# ***தவ தத்தவத:*** - உமக்கு உண்டாக வேண்டுவதாய் இருக்கிற

# * ***மத் ஞான தர்சன ப்ராப்திஷு*** * - என்னைப் பற்றிய முழுமையான ஞானம், அதனால் என்னை அடைய விதிக்கப் பட்ட உபாயம் போன்றவற்றில்

# ***நிஸ்ஸம்சய:*** - எந்த விதமான சந்தேகங்களும் இன்றி

# *ஸுகமாஸ்வ* - இங்குள்ள காலம் சுகமாக வாழ்வீராக ; பிறகு பரமபதத்தில் என்னையே அடைந்து சுகப்படுவீராக (என சரணாகதனிடம் பகவானின் திருவாக்காகிறது )

3. ***சூர்ணிகை விளக்கம்*** :

# ஒரு முமுக்ஷுவானவன் ஐந்து அங்கங்களோடு கூடிய சரணாகதி அனுஷ்டானத்தை, சாஸ்த்திரம் விதித்த முறையில் ஒரு ஆசார்யனைக் கொண்டு, ஆசார்ய பரம்பரையை வந்தனம் செய்து, பெரிய பிராட்டியிடம் புருஷகார ப்ரபத்தியை அனுஷ்டித்து, பிறகு திவ்ய தம்பதிகளின் திருவடிகளில் சரணாகதி அனுஷ்டானத்தை மேற் கொண்டு, ***செய்த வேள்வியனாகி***, இனி பிறவிப் பிணியிலிருந்து தான் விடுபட செய்ய வேண்டுவது ஏதும் கிடையாது என்று நிர்பரனாய் (பொறுப்பு நீங்கியவனாய்) நிர்பயனாய் (பயம் அற்றறவனாய்) நிஸ்சம்சயனாய் (சந்தேகம் அற்றவனாய்) இருந்து போகும் போது, இவ்வுலகத்தில் தான் வாழும் காலத்தில், ***செய்த வேள்வியரின் சிறப்பு இங்கு அறிய*** ஸ்வரூப உபாய புருஷார்த்த நிஷ்டைகளை (தெளிவுகளை) பரீக்ஷித்து தெரிந்து கொள்ளலாம்.

சரணாகதன், இருக்க வேண்டிய நிஷ்டை முன்று வகை என ***ஸ்வ நிஷ்ட அபிஞான*** அதிகாரத்தில் ஸ்வாமி தேசிகன் விளக்கியுள்ளார் :

***ஸ்வரூப நிஷ்டை*** - அழியக்கூடிய சரீரத்தை விட வேறுபட்ட அழியாத தன்மை கொண்ட ஜீவாத்மாவைப் பற்றிய தெளிவு

***உபாய நிஷ்டை*** - மோக்ஷ பலனுக்காக, சாஸ்த்திரம் விதித்த மற்றும் மோக்ஷ பலனுக்காக, தான் அனுஷ்டித்த சரணாகதி அனுஷ்டானத்தில் தெளிவு

***புருஷார்த்த நிஷ்டை*** - மோக்ஷ பலனுக்காக, தான் அனுஷ்டித்த சரணாகதி அனுஷ்டானத்தினால், வர இருக்கும் பலனில் தெளிவு.

இந்த நிஷ்டைகள் இருப்பதை நாமே பரீக்ஷித்து அறிந்து கொள்ள முடியும்.

# ***ஸ்வரூப நிஷ்டையாவது*** உடல் சம்பந்தமில்லாத ஆத்மாவைப் பற்றின தெளிவு. பிறர், ஒரு சரணாகதனை அவமானப் படுத்தும் போது, இந்த ***ஐந்து விதமான*** மன நிலைகள் சரணாகதனிடம் இருந்தால், ஸ்வரூப நிஷ்டை சரணாகதனுக்கு உள்ளது என அறியலாம்:

#அந்த அவமானம் அவன் ஆத்மாவிற்கு அல்ல, அவன் உடலுக்கானது என்று கோபம், சோகம் அற்று இருக்க வேண்டும்.

***க்ஷிப்யமானம்ச யத் பாபம் ஷபந்தம் அபி கச்சதி*** என்கிற படியே, தன் பாபத்தை சுமக்கும் அந்த அவமானபடுத்தியவனிடத்தில் சரணாகதனுக்கு க்ருபை இருக்க வேண்டும்.

***அமர்யாத: க்ஷுத்ர: சலமதி அஸூயா ப்ரஸவபு:*** என்கிற ஸம்ப்ரதாய ஆசார்யனான ஶ்ரீ ஆளவந்தார் ஶ்ரீஸூக்திகளாலும், ***வாடினேன் வாடி*** என்கிற ஆழ்வார் பாசுரங்களாலும் எப்போதும் நினைவில் கொள்ளத் தகுந்த அனுஸந்தேயமான தோஷங்களை மறவாத படி, நினைவூட்டி உபகாரம் பண்ணினான் அவன், என்று நினைக்க வேண்டும், அந்த சரணாகதன்.

***இன்புறும் இவ்விளையாட்டுடையானான*** ஸர்வேஸ்வரனால் தனது பூர்வ ஜன்ம கர்மாவின் அடிப்படையில் இந்த அவமானம் ஏற்பட்டது என இருக்க வேண்டும், அந்த சரணாகதன்.

இதனாலே தனது பூர்வ ஜன்ம ப்ராரப்த பாபம் கழிகிறது என்று சந்தோஷத்துடன் இருக்க வேண்டும், அந்த சரணாகதன்.

# *உபாய நிஷ்டையாவது* மோக்ஷ பலனுக்காக தாம் அனுஷ்டித்த சரணாகதி அனுஷ்டானத்தைப் பற்றின தெளிவு. இந்த நிலைகள் எப்போதும் சரணாகதனிடம் இருந்தால், உபாய நிஷ்டை சரணாகதனுக்கு உள்ளது என அறியலாம்:

ஸ்ரீமந் நாராயணனே தனக்கு, அனைத்திற்கும் ரக்ஷகன், என்கிற நிலையான எண்ணம் சரணாகதனுக்கு வேண்டும்.

*ப்ராயேண அக்ருதக்ருத்யத்வாத் ம்ருத்யோ: உத் விஜதே ஜனா: க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரயம் இவ அதிதிம்* என்கிறபடியே மரணம் உள்பட அனைத்து பயத்தை சந்திக்க நேர்ந்தாலும் பயமற்று சரணாகதன் இருக்க வேண்டும். அதாவது, இந்த சரீரம் துறந்த பிறகு, நாம் என்ன பாடு படுவோமோ என்கிற கவலை அற்று, *அபிமத ஆஸக்தியாலே* விரும்பிய பலனை சீக்கிரம் அடைவோம் என்ற எண்ணத்தாலே சந்தோஷமாய் இருத்தல்.

ஸ்ரீமத் ராமாயணத்தில், சுமந்தரர் ஸ்ரீ ராம ஸீதா லக்ஷ்மணரை தேரில் ஏற்றிச் சென்று நாட்டை கடந்து, வநவாஸ வ்ரதம் மேற்கொள்ள, அவர்களை விட்டு வர, தசரத சக்கரவர்த்தி, சுமந்தரரிடம் ஸுகுமாரியான ஸீதை, வநத்தில் படும் கஷ்டங்களைப் பற்றி, வினவுகிறான். அதற்கு சுமந்தரர் அளிக்கும் பதிலாவது: *கஜம் வா வீக்ஷ்ய ஸிம்ஹம் வா வ்யாக்ரம் வாபி வரானன. ந ஆஹாரயதி ஸந்த்ராஸம் பாஹூ ராமஸ்ய ஸந்த்ரிதா:* அதாவது, ஸ்ரீராமனைப் பற்றி இருப்பதால், காட்டில் சிங்கம், புலி, யானை போன்ற மிருகங்களைக்கண்டு ஸீதை அஞ்சவில்லை … என்று அவர்களை காட்டில் விட்டுவிட்டு வந்த ஸுமந்தரர் தசரதனுக்கு உரைக்கிறார் ; ஸீதா பிராட்டி ஸ்ரீராமனை தன் மணாளனாக கை பிடித்த பின்னர், *ஸ்ரீ ராமனின் ரக்ஷகத்வத்தில் சந்தேகமற்ற தெளிவு* உள்ளதை இந்த அவதாரத்தில் அபிநயித்து விளக்கியது போல், ஸ்ரீமந் நாராயணனே தேஹ யாத்திரை மற்றும் ஆத்ம யாத்திரை விஷயங்களுக்கும் ரக்ஷகன் என்று சரணாகதன் இருக்க வேண்டும்.

ஸ்ரீமத் ராமாயணத்தில், அசோகவநத்தில் சிறை பிடிக்கப் பட்ட ஸீதா பிராட்டி பயமற்று, ராவணனிடம் உரைக்கிறாள். *அஸந்தேஷாது ராமஸ்ய தபஸ்ச அனுபாலனாத். ந த்வா குர்மி தஸக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹ தேஜஸா* ; அதாவது, லங்கையில் ஹநுமானின் வாலில் பட்ட தீயை குளிர்ந்து போகட்டும் என அனுக்ரஹித்த ஸீதையால் ராவணனை சாம்பலாகட்டும் எனப் பண்ணுவது பெரிய விஷயமல்ல ; ஆனால் ஸ்ரீராமன் அவ்வாறு நியமிக்காத்தால் அதை தான் செய்யவில்லை… என்று ஸீதாப் பிராட்டி உரைக்கிறாள். அது போல, *க்ருதக்ருத்யனானவன் வேறு எந்த ஒரு முயற்சியும் செய்யாது* சரணாகதன் இருக்க வேண்டும்.

ஸ்ரீமத் ராமாயணத்தில், அசோகவநத்தில் சிறை பிடிக்கப் பட்ட ஸீதா பிராட்டி பயமற்று, ஸ்ரீ ராம தூதனாக வந்த ஹனுமானிடம், உரைக்கிறாள். *ஷரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்கா பரபலார்தன: மா நயேத்யதி காகுஸ்த தத் தஸ்ய ஸத்ருஷம் பவேத்* ; சத்ருக்களை அழித்து தன்னை மீட்டு செல்வதனாலேயே ஸ்ரீராமனுக்கு பெருமை ஏற்படும் … என்று ஸீதாப் பிராட்டி உரைக்கிறாள் ; அதாவது, இஷ்டப் ப்ராப்தியும் (இஷ்டமான அனுகூலத்தை அடைவதும்) அநிஷ்ட நிவ்ருத்தியும் (இஷ்டமில்லாத அனுகூலம் அற்றதை அடையாமல் இருப்பதும் ) தான் கைபிடித்த ஸ்ரீ ராமனின் திருவுள்ளப் படியே நடக்க வேண்டுவதாக அபிநயித்து காட்டினாள் ஸீதா பிராட்டி. அது போல, *அநுகூலத்தை அடைவதும் ப்ரதிகூலத்தை அடையாதிருப்பதும் அவனதீனம்* என சரணாகதன் இருக்க வேண்டும்.

# *புருஷார்த்த நிஷ்டையாவது* ஸுக ரூபமான மோக்ஷ பலனில் தெளிவு. இந்த கீழுள்ள நிலைகள் எப்போதும் சரணாகதனிடம் இருந்தால், புருஷார்த்த நிஷ்டை சரணாகதனுக்கு உள்ளது என அறியலாம்:

*உத்பத்தி ஸ்திதி நாஷாணாம் ஸ்திதௌ சிந்தா குதஸ்தவ. யதோத்பத்தி யதா நாஷாணாம் ஸ்திதி தத்வத் பவிஷெயதி* அதாவது பிறப்பு, இருப்பு, இறப்பு என்ற மூன்றில் பிறப்பும் இறப்பும் நம் ஆதிக்கத்தில் இல்லை. இது தெரிந்தும், 'இருப்பை' மட்டும் நம் ஆதிக்கத்தில் இருப்பதாக நினைத்து ஏன் துயரப் பட வேண்டும்? *அப்ரயத்ன ஆகதா: ஸேவ்யா க்ருஹஸ்தைர்விஷயா: ஸதா. ப்ரயத்னேனாபி கர்தவ்ய: ஸ்வ தர்ம இதி மே மதி:* அதாவது, ஒரு க்ருஹஸ்தன் பெரிய முயற்சி இல்லாமல் வரும் பலன்களை அனுபவிக்க தக்கவன். ஆனால் நமக்கு விதிக்கப் பட்ட கர்மங்களை முயற்சி செய்தாவது நிச்சயமாக அனுஷ்டிக்க வேண்டும் ; *ந

**ஆஹாரம் சிந்தயேத் ப்ராக்ஞ: தர்ம ஏவ அனுசிந்தயேத். ஆஹாரோஹி மனுஷ்யாணாம் ஜன்மனா ஸஹ ஜாயதே*** அதாவது, புத்தி உள்ளவன் ஆகாரத்தை நினைக்க மாட்டான். தனக்கு ஏற்ற தர்மத்தையே பெரிதாக நினைத்திருப்பான். ஈஸ்வரன் ஸங்கல்பம் அன்றி ஒன்றும் நடவாது என்று மனத்தில் தெளிந்து சரணாகதன் இருக்க வேண்டும்.

***உளது என்று இறுமாவார் உண்டு இல்லை என்று தளர்தல் அதனருகும் சாரார் -அளவரிய வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடி தோயும் பாதத்தான் பாதம் பயின்று*** என்கிற பூத த்தாழ்வாரின் பாசுரம் ; அதாவது, எம்பெருமான் திருவடியில் சரணம் அடைந்தவர்கள், செல்வம் சேரும் போது கர்வம் அடைவதோ அதை இழக்கும் போது சோர்வோ கொள்ள மாட்டார்கள். அது போல, நல்லது, தீயதுகளில் ஸுக துக்கம் அற்று பகவத் கைங்கர்யத்திலே ருசியோடு சரணாகதன் இருக்க வேண்டும்.

***தனம் மதீயம் தவ பாத பங்கஜம் கதா நு ஸாக்ஷாத் கரவாணி சக்ஷுஷா*** என்கிற ஆளவந்தார் ஸ்ரீஸுக்திகளிலும் ***கதாஹம் பகவந்தம் ஸாக்ஷாத் கரவாணி சக்ஷுஷா*** என்கிற வைகுண்ட கத்யாதிகளிலும் உரைக்கிற உயர்ந்த பலனை, எப்போது அடையப் போகிறோம் என்று ஆவலோடு எதிர் நோக்கி, காத்திருக்க வேண்டுவதாகிறது. இந்நிலையானது, கல்யாணத்துக்கு நாள் குறித்த ப்ருஹ்மச்சாரி கல்யாண நாளை எதிர்பார்ப்பது காத்து கிடப்பது போல், அந்த உயர்ந்த மோக்ஷ பலனில் ஆசையுடன் இருக்க வேண்டுவதாகிறது. இவ்வாறு, சம்சாரி ஜீவர்கள், இங்குள்ள காலம், தான் அடையப்போகும் உயர்ந்த மோக்ஷ பலனை எண்ணி மகிழ்ந்தவாறு இருக்கிற நிலை தோன்றுமாகில், அந்த சம்சாரி ஜுவனுக்கு, சரணாகதனுக்கு, புருஷார்த்த நிஷ்டை உண்டு என அறியலாம்.

4. ஸ்ரீராமானுஜ க்ரந்தங்களோடு அத்யந்த அர்த்த விரோதம் கொண்டவர்கள் பூர்வபக்ஷிகள், என்பது ப்ரமாண பலத்தால் ஸித்தம் !

# ***ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த பக்ஷம்*** -

ஸ்ரீராமானுஜர்,

***தஸ்ய ச வசீகரணம் தச்சரணாகதிரேவ***

என ஸ்ரீபாஷ்யத்தில் ***ஆனுமானாதிகரணத்தில்*** அருளினார். அதாவது, அங்க ப்ரபத்தியாகவோ (பக்தி யோக விஷயம்) ஸ்வதந்த்ர ப்ரபத்தியாகவோ பகவானின் திருவடிகளை பற்ற வேண்டுவதாகிறது.

# ***ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்*** -

உபநிஷத் சாரமான ப்ருஹ்ம ஸூத்ரத்துக்கு வ்யாக்யானமான பகவத் ராமானுஜரின் ***ஸ்ரீ பாஷ்ய, கீதா பாஷ்ய கத்யாதிகளில்***, சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை மோக்ஷ காரணமாக விதித்து வெளியிட்ட போதும், அந்த ஆசார்யோத்தமரின் க்ரந்த விரோதமாக, ஸித்தோபாய ப்ரதிபத்தி மட்டுமே மோக்ஷ காரணம் என்று நிர்தேசிக்கிறார்கள் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், என்பதனை வசனபூஷண க்ரந்தங்களைக் கொண்டு தெளியலாம் :

***ஆபத்தைப் போக்கிக் கொள்கிறோம் என்று ப்ரமித்து அத்தை விளைத்துக் கொள்ளாதொழிகையே வேண்டுவது*** (எண் - 62 )

வேத மார்க்கமான பகவத் ராமானுஜரால் ஸ்ரீபாஷ்ய கத்யாதிகளில் சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை விளக்கி இருக்க, ஸாத்யோபாயத்தை நிஷேதித்து விளக்குவது, பூர்வபக்ஷிகளின் ஸம்ப்ரதாய விரோத நோக்கம். அசாஸ்த்ரீயம்.

# ***ஸ்வாமி தேசிகனின் பக்ஷம்*** -

லகு உபாயமான சரணாகதி அனுஷ்டானத்தை, மோக்ஷ ஸாதனமாக பகவான் திருவாக்கினாலே *மாம் ஏகம் சரணம் வ்ரஜ* என அருளினான். ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், இந்த சரமஸ்லோக அர்த்தத்தை விவரிக்கும் போது, ஸ்ரீராமானுஜர் அருளியதை அனுசரித்து,

*ஸுதுஷ்கரேண சோசேத்ய: யேந யேந இஷ்ட ஹேதுந்நா ஸ ஸ தஸ்ய அஹமேவ இதி சரமஸ்லோக ஸங்க்ரஹ:*

என அருளினார். அதாவது, 'யார் ஒருவன் தான் விரும்புகிற பலனை தரக் கூடிய உபாயத்தை அனுஷ்டிக்க முடியாமல் வருந்தி என்னை சரணமாக பற்றுகிறானோ, அவனுக்கு நானே உபாயமாக இருந்து பலனளிக்கிறேன்' என்பதை சரமஸ்லோகத்திற்கு அர்த்தமாக விளக்கினார்.

*சரணாகதி கத்யம் நிறைவு பெற்றது*

(நாளை ஸ்ரீரங்க கத்யம் தொடரும்)

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

*****

1.1.2023
ஞாயிறு கிழமை

1. பகவத் ராமானுஜரின் ஸ்ரீ ரங்க கத்யம் - விளக்கம் - *சூர்ணிகை எண் - 1*

*ஸ்வாதீந த்ரிவித சேதந அசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம் க்லேச கர்ம ஆதி அசேஷ தோஷ அஸம்ஸ்ப்ருஷ்டம் ஸ்வாபாவிக அநவதிக அதிசய ஞான பல ஐஸ்வர்ய வீர்ய சக்தி தேஜஸ் ஸௌசீல்ய வாத்ஸல்ய மார்தவ ஆர்ஜவ ஸௌஹார்த ஸாம்ய காருண்ய மாதுர்ய காம்பீர்ய ஔதார்ய சாதுர்ய ஸ்தைர்ய தைர்ய சௌர்ய பராக்ரம ஸத்யகாம ஸத்யஸங்கல்ப க்ருதித்வ க்ருதக்ஞதா அஸங்க்யேய கல்யாண குணகணௌக மஹார்ணவம் பரப்ருஹ்ம பூதம் புருஷோத்தமம் ஸ்ரீரங்கசாயிநம் அஸ்மத் ஸ்வாமிநம் ப்ரபுத்த நித்ய நியாம்ய நித்ய தாஸ்யைக ரஸ ஆத்ம ஸ்வபாவோஹம் ததேக அநுபவ: ததேக ப்ரிய: பரிபூர்ணம் பகவந்தம் விசததம அநுபவேந நிரந்தரம் அநுபூய தத் அநுபவ ஜநித அநவதிக அதிசய ப்ரீதி காரித அசேஷ அவஸ்தோசித அசேஷ சேஷதைக ரதிரூப நித்யகிங்கரோ பவாநி*

2. *சூர்ணிகை பத உரை* :

# *ஸ்வாதீந த்ரிவித சேதந அசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம்* - 'மூன்று வித சேதனர்கள்' மற்றும் 'மூன்று வித அசேதன வஸ்துக்களின்' இருப்பு, வாழ்வு மற்றும் செயல்களை தன் ஆளுகைக்கு கீழ் கொண்டுள்ள 'சுதந்தரனான ஸர்வேஸ்வரன்', என அருளியுள்ளார். அதாவது, சேதனா அசேதன விசிஷ்ட ப்ருஹ்மம், ப்ரளய காலத்தில், சூக்ஷ்ம சேதன அசேதன விசிஷ்ட ப்ருஹ்ம மாக இருந்து, ஸ்ருஷ்டி காலத்தில், ஸ்தூல சேதனா அசேதன ப்ருஹ்மமாக மாறுகிறது, என்றபடி.

# *க்லேச கர்ம ஆதி அசேஷ தோஷ அஸம்ஸ்ப்ருஷ்டம்* - சேதன அசேதனங்களோடு அப்ருதக் ஸித்த சம்பந்தம் உடையவனே ஆயினும், அஹங்கார மமகார தோஷங்களால் பாதிக்கப் படாமலும் அதனால் பாப புண்ய கர்ம சம்பந்தம் அற்றவனுமான எம்பெருமான்

# *ஸ்வாபாவிக அநவதிகாதிசய ஞான பல ஐச்வர்ய வீர்ய சக்தி தேஜஸ்* - இயல்பானதுவும் எல்லை அற்றதுவுமான *ஞானம்* (அனைத்தையும் எப்போதும் அறிபவன்), *பலம்* (ஸர்வத்தையும் தாங்குபவன்), *ஐஸ்வர்யம்* (அனைத்தையும் நியமிப்பவன்), *வீர்யம்* (மாறுதல் அற்றவன்), *சக்தி* (மிக எளிதாக எதையும் செய்வபவன்), *தேஜஸ்* (கண்டவுடன் வணங்கச் செய்பவன்) என்று பரத்வ உபயுக்மான தன்மைகளைக் கொண்டவன் ஸர்வேஸ்வரன் ; இதனால் அவன் ப்ராப்யனாகவும் ப்ராபகனாகவும் ஆகிறான்.

# *ஸௌசீல்ய வாத்ஸல்ய மார்த்தவ ஆர்ஜவ ஸௌஹார்த* - எளியவனாகவும், குற்றங்களை பொறுப்பவனாகவும், அடியார்களை பிரிய மனம் அற்றவனும், மனம் வாக்கு காயங்களில் ஏக தன்மை கொண்டவனும், ஜீவர்களிடம் நல் எண்ணம் கொண்டவனும்

# *ஸாம்ய காருண்ய மாதுர்ய காம்பீர்ய ஔதார்ய சாதுர்ய ஸ்தைர்ய தைர்ய சௌளர்ய பராக்ரம* - பாரபக்ஷமற்றவனும், பிறர் துக்கங்களை களைபவனும், எதிர்ப்பவர்களையும் நேசிப்பவனும், ஜீவர்களுக்கு அவன் செய்யும் உபகாரங்களை அளவிட முடியாத படி உள்ளவனும், உபகாரகனும், ஜீவர்களின் குற்றங்களை பெரிதாகக் கொள்ளாதவனும், அடியார்ளை ரேஷிக்கும் போது உள்ள இடர்களை போக்குபவனும், ரக்ஷிப்பதில் உறுதி உடையவனும், எதிரிகளை அழிப்பதில் வீரம் சாமர்த்யம் உடையவனுமானன் என்று காருண்ய உபயுக்மான தன்மைகளைக் கொண்டவன் ஸர்வேஸ்வரன்

# *ஸத்யகாம* - ஜீவர்களுக்கு நலன் பயப்பதையே தனக்கு இச்சையாகக் கொண்டவன் ஸர்வேஸ்வரன்.

# *ஸத்ய ஸங்கல்ப* - அகர்மவச்யனானவன் கர்ம வச்யர்கள் உள்ள ப்ரபஞ்சத்தில் அவதாரங்களைச் செய்தும் ஜீவர்களை ரக்ஷிக்க வல்லவன் ஸர்வேஸ்வரன்

# *க்ருதித்வ* - தானே சம்சாரி ஜீவர்களை, ஒரு ஸுஹ்ருத விசேஷத்தால், உபாயத்தில் மூட்டி ரக்ஷிப்பவன் ஸர்வேஸ்வரன்

# *க்ருதக்ஞதா* - ப்ரபத்தி அனுஷ்டித்தவனிடம் குற்றங்களை காணாது பரம புருஷார்த்தத்தை அளிப்பவன் ஸர்வேஸ்வரன்

# *அஸங்க்யேய கல்யாண குணகநௌக  மஹா ஆர்ணவம் !* - எண்ணில் அடங்காத நற் குணங்களை ஆஸ்ருதர்களுக்கும் பூரணமாக விஷயமாகாதபடி உள்ளவன் ஸர்வேஸ்வரன்

# *பரப்ருஹ்ம பூதம் புருஷோத்தமம் ஸ்ரீரங்கசாயிநம் அஸ்மத் ஸ்வாமிநம்* - அவனே பரப்ருஹ்மம், பரம சேதனன், திருவரங்கத்தில் பள்ளி கொண்ணிருப்பவன், ஸர்வ சேஷியானவன், அடியேனுக்கும் ஸ்வாமி

# *ப்ரபுத்த நித்ய நியாம்ய நித்ய தாஸ்யைக ரஸ ஆத்ம ஸ்வபாவோஹம்* - எந்த நிலையிலும் எல்லாக் காலங்களிலும் எம்பெருமானோடு உள்ள அடியேனது நியாம்ய தாஸ்ய ஸ்வபாவத்தை உணர்ந்து

# *ததேக அநுபவ: ததேக ப்ரிய: பரிபூர்ணம் பகவந்தம் விசததம அநுபவேந நிரந்தரம் அநுபூய* - அந்த பகவத் அநுபவத்தால் அவனிடம் பக்தி கொண்டு பகவத் கல்யாண குணங்களை அநுபவிப்பதால் உண்டாகிற நிரந்தரமான புருஷார்த்தமே பெருமை வாய்ந்ததுவும் உயர்ந்ததுவும் ஆகிறது

# *தத் அநுபவ ஜநித அநவதிக அதிசய ப்ரீதி காரித* - இப்படிப் பட்ட பகவத் அநுபவத்தால் எல்லை இல்லாத ப்ரீதியினால் ஆன பகவத் கைங்கர்யம்

# *அசேஷ அவஸ்தோசித அசேஷ சேஷதைக ரதிரூப நித்யகிங்கரோ பவாநி* - குறைவற்றதாகவும் எல்லா நிலைகளிலும் அடியேனுக்கு ஸித்திக்க வேண்டும் என்பது உத்தரக்ருத்ய ப்ரார்த்தனை

3. *சூர்ணிகை விளக்கம்* :

# ஈஸ்வரனைப் பற்றிய பாரமார்த்திக ஞானம் ; அவனே உபாதான காரணம் எனும் போது வரும் சங்கைகளை பகவத் ராமானுஜர் ஸ்ரீபாஷ்ய க்ரந்தத்தில் விளக்கியுள்ளார். ஸ்ருஷ்டி தசையில், ஸூக்ஷ்ம

சேதன அசேனங்களை தனக்கு சரீரமாகக் கொண்ட ப்ருஹ்மம், ஸ்தூல சேதன அசேனங்களை தனக்கு சரீரமாகக் கொண்ட ப்ருஹ்மம் ஆகிறது. ஆக, ஸகல சேதன அசேதன வஸ்துக்களுக்குள், நாராயணன், வ்யாபித்து இருக்கிறான், என்பதால், அதைத் தொட்டு இரு வித தோஷங்கள் எம்பெருமானுக்கு சம்பவிக்குமோ எனக் கொண்டு, அதை ப்ரமாண பலத்தாலே (ஹேய ப்ரத்யநீகத்வம் மற்றும் கல்யாணைக தாநத்வம் உடைய எம்பெருமான் என) நிராகரிக்கிறார், ஸ்வாமி தேசிகன்; அந்த தோஷங்களாவது:

***தத்கத தோஷம்*** மற்றும் ***தத் ப்ரயுக்த தோஷம்***

# இதில், ***தத்கத தோஷமாவது*** **-** அவற்றில் உள்ள தோஷம் என பொருளாகிறது.

எம்பெருமான் ஸர்வ வ்யாபியாக இருந்தும், கர்ம ஸம்பந்தம் என்கிற சேதன தோஷமும், முக்கணங்களாகிய (அசேதநமான) ப்ரக்ருதி தோஷமும், அவனை களங்கப் படுத்துவதில்லை. இதற்கு ப்ரமாணம் முண்டகோபநிஷத்:

***த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமானம் வ்ருக்ஷம் பரிஷ்ஸ்வஜாதே தயோரன்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி அனச்னன் அன்யோ அபிசாகசீதி***

என்கிறது. அதாவது, ‘ஜீவன் மற்றும் பரமாத்மா என்கிற இரு பறவைகள் ஒரே மரத்தில், அதாவது ஒரே உடலில், இருக்கின்றனர். இயற்கையில், எட்டு விதமான குணங்களினால் ஒன்று பட்டவர்களாக இருவரும் இருக்கின்றனர். இருவரும் நண்பர்களைப் போல் இருக்கின்றனர். அதில் ஒரு பறவை (சம்சாரி ஜீவன்) மரத்தில் உள்ள பழங்களை (உடல் ரீதியான கர்மாவினால் ஏற்படும் ஸுக துக்கங்களை) அனுபவிக்கிறது. மற்றொறு பறவை (பரமாத்மா) அத்த பழத்தை சுவைக்காமல் (கர்மாவினால் வரும் ஸுக துக்கங்களை அனுபவியாமல்) மிகப் பொலிவுடன் திகழ்கிறது. ஆக, சம்சாரி ஜீவர்களின் கர்ம சம்பந்தம் எனும் தோஷம், எம்பெருமானை ***தத்கத தோஷமாகத்*** தீண்டுவதில்லை, என்றபடி. இதை உலக உதாரணம் கொண்டும் தெளியலாம். சிறைச்சாலையில், தண்டனைப் பெற்ற கைதிகளும் உள்ளனர். சிறைச்சாலை அதிகாரிகளும் இருக்கின்றனர். ***குற்றத்திற்கான தண்டனை*** எனும் தோஷம் சிறைச்சாலை கைதிகளுக்கு இருந்த போதும், சிறைச்சாலை அதிகாரிகளை, அந்த தோஷம் தீண்டுவதில்லை.

# இதில், ***தத் ப்ரயுக்த தோஷமாவது*** **-** அவற்றின் சம்பந்தத்தினால் ஏற்படும் தோஷம் என பொருளாகிறது. சேர்க்கையினால் ஏற்படும் தோஷமாவது, பொதுவாக சம்சாரி ஜீவர்களுக்கு, ***ப்ரக்ருதி சம்பந்தம்*** என்கிற முக்குணங்களாலான சரீர சம்பந்தத்தினால், ஏற்படுகிறது. ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (7-14) கூறும் போது,

***தைவி ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்ய்யா. மாமேவயே ப்ரபத்யந்தயே மாயாமேதாம் தரந்திதே***

அதாவது, ‘என்னுடைய அதீனத்தில் உள்ள முக்குணங்களாலான ப்ரக்ருதி என்கிற மாயையை கடப்பதற்கு என்னையே சரண் அடைய வேண்டும்’, என்கிறான். ஆக, ப்ரக்ருதியைத் தன் அதீனத்தில் உடைய எம்பெருமானுக்கு ***தத் ப்ரயுக்த தோஷமும்*** தீண்டுவதில்லை, என்றபடி.

# மோக்ஷத்திற்காக சரணாகதி அனுஷ்டானம் செய்யும் ***ஏதத் தேஹ அவஸாநே மாம் த்வத் பாதம் ப்ராபய*** என்று தற்போது உள்ள சரீரத்திலிருந்து ஆத்மா கிளம்பிய பிறகு மோக்ஷம் அடைய வேண்டி ப்ரார்த்தனை. இந்த சரீரத்தின் முடிவில் மோக்ஷம் வேண்டி சரணாகதி செய்தவன் விஷயத்தில் பாப புண்ய கர்மாக்கள் விலகும் விதங்கள் சாஸ்த்ரங்களில் தெளிவு படுத்தப் பட்டுள்ளன : ஸஞ்சித கர்மாக்கள் (பலன் கொடுக்க ஆரம்பிக்காதவை) **-** அடியோடு விலக்கப் படுகிறது; ப்ராரப்த கர்மாக்கள் (பலன் கொடுக்க ஆரம்பித்தவை) **-** இந்த சரீரம் முடியும் காலம் வரை உள்ள கர்மாக்கள் பலன் கொடுத்துவிடும் ; மீதம் உள்ள ப்ராரப்த கர்மாக்கள், மற்றுமொரு சரீரத்தை கொடுக்காமல் விலக்கப்படும். அதனால், இங்குள்ள காலம் வரும் ஸுக துக்கங்களை, சரணாகதனுடைய கர்மாவிற்கு ஏற்ப, ஸர்வேஸ்வரன் ஸுக துக்க பலனாக அளித்து, பிறகு கர்ம சம்பந்தமற்ற ஸுக ரூபமான மோக்ஷத்தை அளிக்கிறான்.

# அதனால், அப்புபகத ப்ராரப்த கர்ம அனுகுணமான ஸுக துக்கங்களில் மனத்தை ஈடுபடுத்தாமல் பகவானிடம் மனம் லயிக்கும் வகையில் உத்தரக்ருத்யம் அமைய ஆழ்வார்கள் அறுதியிடுகின்றனர் : ஸ்வாமி குலசேகராழ்வார், பெருமாள் திருமொயியில் (5-1)

*தரு துயரம் தடா ஏல் உன் சரண் அல்லால் சரண் இல்லை விரை குழுவும் மலர்ப் பொழில் சூழ் விற்றுவக்கோடு அம்மானே அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்று அவள் தன் அருள் நினைந்தே அழும் குழவி அதுவே போன்று இருந்தேனே*

அதாவது, ஒரு தாயானவள், தன் குழந்தையின் செயலால் கோபமுற்று வெறுத்து அகற்றினாலும், அந்த குழந்தையானது அந்த தாயின் கருணை வேண்டி அவள் கால்களை கட்டி அழுவது போல், நீ என்னை துன்பங்களைக் கொண்டு அகற்றினாலும், எனக்கு உன் திருவடிகளை அன்றி வேறு புகலில்லை, வித்திவக்கோடு எம்பெருமானே ! ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த ***பெரிய திருவந்தாதியில்*** கூறியபடி

*கார்க்கலந்த மேனியான் கைகலந்த ஆழியான், பார்க்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான், சீர்கலந்த சொல்நினைந்து போக்காரேல் சூழ்வினையின் ஆழ்துயரை, என்நினைந்து போக்குவரிப் போது?*

அதாவது, எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனது குணங்களை கூறும் ஸ்ரீஸூக்திகளை நினைத்துக் கொண்டு கர்மத்தினால் உண்டான இன்னல்களை ஜனங்கள் போக்கிக் கொள்ள வேண்டும், இல்லாவிடில் சம்சார துக்கத்தை எதை நினைத்துப் போக்குவது? என வேண்டுவதாய் உத்தரக்ருத்யம் அமைய வேண்டும்.

4. ஸ்ரீராமானுஜ க்ரந்தங்களோடு அத்யந்த அர்த்த விரோதம் கொண்டவர்கள் பூர்வபக்ஷிகள், என்பது ப்ரமாண பலத்தால் ஸித்தம் !

# ***ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த பக்ஷம்*** -

உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, ***ப்ருஹ்ம ஸுத்ரம்*** (4ம் அத்யாயம் 1ம் பாதம் 7வது அதிகரணம் 13ம் ஸுத்ரம்)

***ததகிம உத்தர பூர்வ அகயோ: அஸ்லேஷ வினாஷெள தத் வ்யபதேஷாத்***

என்கிறது. அதனை பகவத் ராமானுஜர், தனது க்ரந்தமான ஸ்ரீபாஷ்யத்தில் விளக்கியுள்ளார். அதாவது, இங்கு மோக்ஷத்தை விரும்பி பக்தி யோகமோ அல்லது சரணாகதி அனுஷ்டானமோ செய்பவர்களின் முன்பு செய்த பாபங்களும் பின்பு ஏற்படும் பாபங்களும் நீங்குவதை பிரித்து கூறப் படுகின்றன.

# ***ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்*** -

ஆனால், ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், ***குன்றனைய குற்றஞ் செயினும் குணங்கொள்ளும்*** என்பதை எம்பெருமானின் வாத்ஸல்யமாவது, ***கேசவம் தோஷ போக்யம்*** என்கின்றனர். அதாவது 'அடியார்களின் குற்றங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறான் எம்பெருமான்' எனக் கூறுகின்றனர். அதனால் மோக்ஷத்திற்காக ஸாத்யோபாயமோ அல்லது தவற்றிற்கான ப்ரயஸ்சித்தமோ தேவை அற்றது என்பது பூர்வபக்ஷிகளின் பக்ஷம்.

# ***ஸ்வாமி தேசிகனின் பக்ஷம்*** -

சம்சார தசையில், ஞான சங்கோசத்தினால் உண்டாகி இருக்கும் விபரீதம் நீங்க ***அவித்யா நிவ்ருத்தி ரேவ ஹி மோஷ்*** (விபரீத ஞானம் நிங்குவதே மோக்ஷ காரணமாகும்) என சொல்லப் படுகிறது ; இப்படி சொல்லப் படுகிற ***ஞானம் கிம் ரூபம் ?*** என பகவத் ராமானுஜர் ஸ்ரீ பாஷ்ய லகு ஸித்தாந்தத்தில்

விளக்குகிறார். செயலுக்கு உட்படாத ஞானம் பலனுக்கு காரணமாகாது, என விளக்ககினார். ஸ்வாமி தேசிகன், ***ஸாத்யோபாய சோதனாதிகாரத்தில்*** விளக்கும் போது,

***இதுவும் (ஸித்தோபாய ப்ரதிபத்தியே மோக்ஷ காரணம் என்பதுவும்) வாக்ய ஜன்ய ஞான மாத்திரத்தாலே மோக்ஷமென்கை போலே அநாதரணீயம்***

என அருளினார். ஆக, பகவானுக்கு தாஸன் என்கிற ஸ்வ ஸ்வரூபத்தை, சம்சாரி ஜீவன் முதலில், ஆசார்ய உபதேசத்தாலே அறிய வேண்டும். அது ***வாக்ய ஜன்ய ஞானம்*** (சாஸ்த்திர வாக்கியத்தால் தெளிவிக்கும் அறிவு) - அதன் பிறகு, சாஸ்த்திரம் விதித்த, மோக்ஷ உபாயத்தை அனுஷ்டிக்க வேண்டியது. அது, ***விதிக்கு விஷயமானது*** ; மோக்ஷ உபாய சாஸ்த்திர விதிகள் பயனுள்ளதாக இருக்க, இதுவே, மஹரிஷியின் வரிகளுக்கு தாத்பர்யம்.

(நாளை ஶ்ரீரங்க கத்யம் தொடரும்)

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****